வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

11.11.2020 புதன்கிழமை

## கண்டியில் 3 இடங்கள் முடக்கம்

கொழும்பு, நவ. 11

கண்டி மாவட்டம், கலகெதர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புரேகம பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன.

அந்தப் பிரதேசத்தில் 5 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதைத் தொடர்ந்து கும்புரேகம, தீப்பலாகொட, ஏத்தமுல்ல ஆகிய இடங்களே முடக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவத்துக்கு காணி அமைச்சரவை அனுமதி

### எங்கு வழங்கப்படும் என்பது குறித்து தகவலில்லை

கொழும்பு, நவம்பர் 11

நாட்டில் காணிகள் இல்லாத இராணுவத்தினருக்குக் காணிகளை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமையவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

02

## கொரோனா உயிரிழப்பு 41ஆகியது!

### நேற்று மட்டும் நால்வர் மரணம்

கொழும்பு, நவ 11

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.

கொரோனா தொற்று உறுதியான நிலையில் மேலும் ஐந்து பேர் உயிரிழந்த நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

02

## அபாயம் இல்லை என்று மக்கள் அசமந்தப்போக்கு

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் கவலை

கொழும்பு,நவ.11

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதையடுத்து, வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் பாதிப்புக்கள் குறைவு என்றும் பொது மக்கள்

02

## மூளைக்காய்ச்சலால் யாழில் யுவதி மரணம்

யாழ்ப்பாணம், நவ 11

காங்கேசன்துறை - கீரிமலை பகுதியைச் சேர்ந்த யுவதி ஒருவர் மூளைக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார் என்று யாழ்.போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

பாலசுப்பிரமணியம் நிபோயனா (வயது 20) என்ற யுவதியே உயிரிழந்தவராவார்.

கடந்த 29ஆம் திகதி குறித்த யுவதி வாந்தி எடுத்து மயங்கியுள்ளார். அவரை உறவினர்கள் அழைத்துச் சென்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்திருந்தனர். எனினும், யுவதி நேற்று முன்தினம் சிகிச்சை

02

### கொரோனா தடுப்பு

## மருந்தை மாத்திரம் நம்பியிருக்கமுடியாது

கொழும்பு, நவ.11

கொரோனா வைரஸ் மருந்து கிடைக்கக்கூடிய காலம், செலவு உட்பட பல விடயங்களைக் கருத்தில் கொள்ளும் போது இலங்கை கொரோனா வைரஸ் தொற்று மருந்தை மட்டும் நம்பியிருக்க முடியாது என தொற்று நோயியல் பிரிவின் தலைமை அதிகாரி மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

02

## திரியாயில் தமிழரின் காணிகளை அபகரிப்பதற்கு இடைக்கால தடை

### திருகோணமலை மேல்நீதின்றம் உத்தரவு

திருமலை, நவ 11

திருகோணமலை மாவட்டத்தின் திரியாய், தென்னைமரவாடி பகுதிகளில் தமிழர்களின் பூர்வீக நிலங்களில் 340 ஏக்கர் நிலப்பரப்பைச் சுவீகரித்து வெளியான வர்த்தமானி அறிவித்தலுக்கு திருகோணமலை மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் இடைக்காலத் தடை விதித்தார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி வரை இந்த இடைக்காலத் தடை உத்தரவு போடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் திரியாய், தென்னைமரவாடி பிர

02

## 1 கிலோ சீனி ரூ. 85 வந்தது வர்த்தமானி

கொழும்பு, நவ 11

ஒரு கிலோ கிராம் சீனியின் ஆகக் கூடிய சில்லறை விலை 85 ரூபாயாக நிர்ணயித்து அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

மொத்த விற்பனைக்காக ஒரு கிலோ கிராம்

02

## தீபாவளியை மக்கள் அனைவரும் வீடுகளிலேயே கொண்டாடுங்கள்

### வடக்கு சுகாதார பணிப்பாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ 11

எதிர்வரும் 14ஆம் திகதி தீபாவளிப் பண்டிகையை பொதுமக்கள் அனைவரையும் வீட்டிலிருந்து அமைதியாக கொண்டாடவேண்டும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது: -

எதிர்வரும் 14ஆம் திகதி இந்து மக்க

02

## நேற்று மட்டும் 430 பேருக்கு கொரோனா

கொழும்பு,நவ.11

இலங்கையில் நேற்று மட்டும் 430 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல்

02

## முஸ்லிம்கள் உடல் அடக்கம் இன்னும் தீர்மானம் இல்லை



கொழும்பு,நவ.11

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்யும் தற்போதைய நடைமுறையில் மாற்றங்களை மேற்கொள் வது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என சுகாதார அமைச்சின் பேச்சாளர் மருத்துவர் ஜெயருவன் பண்

02

## யாழ்ப்பாண மருத்துவ பீடத்தில் இன்று முதல் மீண்டும் பி.சி.ஆர்.

### தினமும் 60 மாதிரிகள் பரிசோதனை

யாழ்ப்பாணம், நவ 11

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் இன்று புதன்கிழமை முதல் மீண்டும் பி. சி. ஆர் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மருத்துவ பீடத்தின் வழக்கமான பணிகளுக்குப் பாதிப்பேதும் ஏற்படாத வகையில் பி.சி.ஆர் பரிசோதனை ஆய்வுகூடம் மருத்துவ பீடத்தில் இருந்து வேறாக்கப்பட்டு, தனியான பாதை அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு சர்வதேச நுண்ணுயிரியல் ஆய்வுத் தர நியமங்களுக்கமைய பி. சி. ஆர் பரிசோதனைகள்

02

ஈழநாடு
Eelanadu

முதல் வருட நிறைவு சிறப்பிதழ் நாளை...!

## தீபாவளியை....

ளால் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பட இருக்கின்றது. தற்போதுள்ள சூழ் நிலையில் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று மிக வேகமாகப் பரவி வருகின்றது.

கொரோனாத் தொற்று நோயினால் பல இறப்புகளும் அடுத்தடுத்து ஏற்பட்டு வருகின்றன. இந்தநிலையில், தீபாவளிப் பண்டிகைக்காக பொதுமக்கள் பெருமளவில் ஒன்றுகூடும்போது இந்த நோய் வட பகுதியிலும் தீவிரமாகப் பரவும் வாய்ப்புள்ளது.

எனவே, இந்த முறை தீபாவளிப் பண்டிகையை பொதுமக்கள் அனைவரையும் வீட்டிலிருந்து அமைதியாக கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இதன் மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

நாம் அனைவரும் சமூகப் பொறுப்புடன் அமைதியாக வீட்டிலிருந்து தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவோம்" - என்றார். (அ-3)

## திரியாயில்....

தேசங்களில் 340 ஏக்கர் நிலப்பரப்பை, சமய வழிபாட்டு நோக்கங்களுக்காக சப்தநாக பப்பத வன செனசுன நம்பிக்கை பொறுப்புச் சபைக்கு வழங்குவதாக குறிப்பிட்டு, கடந்த ஒக்ரோபர் 2 ஆம் திகதியிட்ட வர்த்தமானி வெளியிடப்பட்டது.

தென்னைமரவாடியைச் சேர்ந்த 3 காணி உரிமையாளர்கள், திரியாயைச் சேர்ந்த 17 காணி உரிமையாளர்கள் சார்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது மேற்படி 20 பேரின் காணிகளைக் கட்டுப்பாட்டில் எடுக்கும் அரச வர்த்தமானிக்கு இடைக்காலத் தடை உத்தரவு வழங்கினார் நீதிபதி.

இதன்போது, எதிராளிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்ட அவர் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

சட்டத்தரணி பிரசாந்தினி உதயகுமாரின் அனுசரனையுடன் சட்டத்தரணி கேசவன் சயந்தன் நேற்றுக் காலை மன்றில் செய்த சமர்ப்பணங்களை அடுத்து நீதிபதி இந்த உத்தரவை விடுத்தார்.

திருகோணமலை மாவட்டம் திரியாய், தென்னைமரவாடிப் பிரதேசங்களில் சுமார் 340 ஏக்கர் நிலப்பரப்ரபை பௌத்த ஆலயங்களுக்கு முப்பது வருட கால குத்தகைக்கு அளித்தல் என்ற பெயரில் ஒரு வர்த்தமானி அறிவித்தலை அரசு விடுத்தது.

02.10.2020 திகதியிடப்பட்ட இந்த வர்த்தமானி அறிவித்தலில் மேற்படி காணிகள் அமைந்துள்ள பகுதிகளை சமய வழிபாட்டு நோக்கங்களுக்காக "சப்தநாக பப்பத வன செனசுன நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கு" வழங்குவதற்கு அரசு முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இவை பெரும்பாலும் நூற்றாண்டுக்கு மேற்பட்ட உறுதி முடிப்புகளுடன் கூடிய தமிழர்களின் பூர்வீகக் காணிகள் என்று கூறப்படுகின்றன.

இதில் தமிழர்களின் காலாதிகால வயல் நிலங்களும் அடங்குகின்றன.

இந்த வர்த்தமானி அறிவித்தலை அடுத்து காணிக்காரர்கள் தமது வயல்களுக்குள் இறங்கத் தடை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து, தென்னமரவாடியைச் சேர்ந்த மூன்று காணி உரிமையாளர்கள் சார்பிலும், திரியாயைச் சேர்ந்த 17 காணி உரிமையாளர்கள் சார்பிலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அந்த வழக்குகளை நேற்று பரிசீலனைக்கு எடுத்த கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம் மேற்படி இடைக்காலத் தடையை விதித்தது.

புதிதாக உதயமாகியுள்ள 'மக்களுக்கான நீதி' சட்டத்தரணிகள் அமைப்பின் முதல் வழக்கு இது.

அந்த அமைப்பின் சார்பில் சட்டத்தரணி சயந்தன் வாதாடி இந்த இடைக்கால உத்தரவைப் பெற்றார்.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்து வழக்கு நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.

## நேற்று மட்டும்....

சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதில் அதிகளவானோர் பேலியகொடை கொரோனா கொத்தணி தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய மினுவாங்கொடை மற்றும் பேலியகொடை கொரோனா கொத்தணியில் இதுவரை பதிவான மொத்த தொற்றாளர்கள் எண்ணிக்கை 11 ஆயிரத்து 233 ஆக அதிகரித்துள்ளது. (அ-எ)

## 1 கிலோ சீனி....

சீனியின் விலை 80 ரூபாவாகவும் சில்லறை விற்பனைக்காக ஒரு கிலோ கிராம் சீனியின் விலை 85 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பைக்கெற்றில் பொதி செய்யப்பட்டு சில்லறைக்கு விற்பனை செய்யப்படும் ஒரு கிலோ கிராம் சீனியின் விலை 90 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை நிர்ணயம் தொடர்பான அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பு நேற்று நள்ளிரவு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் சீனிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய விலைக்கு மேலாக இறக்குமதியாளர், வழங்குநர் அல்லது வியாபாரி எவரும் விற்பனை செய்யவோ, வெளிப்படுத்தவோ, விற்பனைக்கு விடவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ அல்லது விற்பனைக்கு வழங்கவோ முடியாது என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தவிசாளர், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திஸாநாயக்க பணித்துள்ளார்.

## யாழ்ப்பாண....

இன்று முதல் இடம்பெறவுள்ளன.

மருத்துவ பீடத்தில் இருந்து கடந்த முறை இந்தப் பரிசோதனைகளை மேற்கொண்ட மருத்துவர்களான அ.முருகானந்தன், மு. கலாமதி மற்றும் பேராசிரியர் செ. கண்ணதாசன் ஆகியோர் மட்டுமே இந்தப் பரிசோதனைகளில் ஈடுபடவுள்ளனர். இவர்களுடன் பணியாற்றுவதற்கென யாழ். பல்கலைக்கழகத்தினால் நான்கு நுண்ணுயிரியல் ஆய்வுகூட வியலாளர்களும் புதிதாகப் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

வடக்கில் கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் மாத்திரம் பி. சி. ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதால் முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

இதனைத் தவிர்க்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் பி. சி. ஆர் பரிசோதனைகளை மேற்கொண்டு, முடிவுகளை விரைந்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா,வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆர். கேதீஸ்வரன், உதவிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ். குமாரவேல், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி, யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவ நிபுணர் எஸ். ரவிராஜ், சமுதாய மருத்துத் துறைத் தலைவரும், பல்கலைக் கழக கொவிட் 19 செயலணியின் இணைப்பாளருமான மருத்துவர் எஸ். சுரேந்திரகுமாரன் மற்றும் நுண்ணுயிரியல், நோயியல்துறை விரிவுரையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் தற்போதுள்ள பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 60 மாதிரிகளே சோதனை செய்யப்பட முடியும். மருத்துவ பீடத்தினால் மேற்கொள்ளப்படும் பி. சி. ஆர் பரிசோதனை முடிவுகள் தினமும் மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எஸ். ரமேஸ் தெரிவித்துள்ளார். (அ-03)

## இராணுவத்துக்கு....

கடந்த 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி இராணுவத்தினருக்கு காணி வழங்குவது தொடர்பில் அமைச்சரவையில் புதிய பொறிமுறை ஒன்று முன்வைக்கப்பட்டு அதற்கான அனுமதி பெறப்பட்டது. பின்னர் அந்தப் பொறிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டு இராணுவத்தினர் சிலருக்கு காணிகள் வழங்கப்பட்டன. ஆனால், அந்தப் புதிய பொறிமுறையை அறிமுகம் செய்வதற்கு முன்னர் வழங்கப்பட்ட காணிகளை பெற்றுக்கொண்ட பலர் சில சிக்கல்களுக்கு முகம் கொடுத்திருந்தனர். மேலும் சில இராணுவக் குழுக்களுக்கு காணிகள் வழங்கும்போது சமத்துவமின்மை காணப்பட்டுள்ளது. அவற்றை நிவர்த்தி செய்வதற்காக இந்தப் புதிய காணி வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதனூடாக காணியில்லாத இராணுவத்தினருக்கு காணிகள் கிடைக்கும். இவ்வாறு வழங்கப்படும் காணிகள் நாட்டில் எந்தப் பகுதிகளில்தெரிவு செய்யப்படப்போகின்றன என்பது பற்றி விவரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

வடக்கு-கிழக்கில் பொதுமக்களின் காணிகள் பல இராணுவத்தினரால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தக் காணிகள் இன்னமும் மக்களிடம் மீளளிக்கப்படவில்லை. இந்நிலையில் இராணுவத்தினருக்குக் காணிகள் வழங்கும் இந்த நடவடிக்கை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளன. (அ)

## முஸ்லிம்களின்....

டார தெரிவித்துள்ளார்.

இலங்கை மண்ணின் நிலைமை மற்றும் கொரோனா வைரஸின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப காரணங்களைக் கருத்தில் கொண்டே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உடல்களை தகனம் செய்யும் முடிவை எடுத்தார் எனச் சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தத் தருணத்தில் அதனை மாற்றுவதற்கான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. அனைவரும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றினால் இலங்கை பாரிய பேரிடரைத் தவிர்க்க முடியும் என்றும் அவர் கூறினார். (அ-எ)

## மூளைக்காய்ச்சலால்....

பலன் இன்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் கூறினர்.

மரண விசாரணையை வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைக்குச் சடலம் உத்தரவிடப்பட்டுள்ளது.

## அபாயம் இல்லை....

மத்தியில் அநாவசிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால், அடிப்படைச் சுகாதார விதிமுறைகளைப் பேணாமல் செயல்படுகின்றமையை அவதானிக்க முடிகிறது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அதன் செயலாளர் மருத்துவர் செனால் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

மினுவாங்கொடை கொத்தணி உருவானதன் பின்னர் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக உயர்வடைந்ததைப் போன்று குறுகிய காலத்தில் அதிகளவான மரணங்களும் பதிவாகியுள்ளன. அண்மையில் பதிவாகிய மரணங்களில் 50 சதவீதமானோர் வீடுகளிலேயே உயிரிழந்தனர்.

கொரோனா தொற்றினால் பாரிய பாதிப்புக்கள் எதுவும் இல்லை என்று மக்கள் அநாவசிய நம்பிக்கை கொண்டுள்ளனர். எனினும் தற்போதுள்ள அபாயமான நிலைமையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். வெவ்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இந்த தொற்று ஏற்பட்டால் அதன் விளைவுகள் பாரதூமானவையாக இருக்கும்.

எவ்வாறிருப்பினும் அடிக்கடி மரணங்கள் பதிவாக ஆரம்பித்த போதே அவை தொடர்பில் ஆராய்வதற்காக மீளாய்வு குழுவொன்றை நியமிக்குமாறு நாம் வலியுறுத்தினோம். அதற்கான நடவடிக்கைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனவே எதிர்வரும் தினங்களில் இவ்வாறு வீடு களிலேயே மரணங்கள் பதிவாகினால் அவை தொடர்பில் பகுப்பாய்வு செய்யப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

தற்போது ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதால் வைரஸ் கட்டுப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளதாக தவறான நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மீண்டும் அடிப்படை சுகாதார விதிமுறைகளை மறந்து மக்கள் செயற்பட ஆரம்பித்துள்ள அபாய நிலைமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது முற்றிலும் தவறான விடயமாகும். நாட்டிலுள்ள மக்களும் அனைவரும் அவதானமாகவே அன்றாட செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (அ-எ)

## மருந்தை....

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இவ்வாறான தொற்று நோய்கள் காணப்படுகின்ற போது அவற்றைக் கட்டுப்படுத்தவே முன்னுரிமை வழங்க வேண்டும். கொரோனா வைரஸ் மருந்து இன்னமும் ஆராய்ச்சி நிலையிலேயே உள்ளது. இதனால் அது கிடைக்க இன்னும் ஆறு மாதங்களாகும்.

கொரோனா வைரஸ் மருந்து தயாரானதும் தடுப்பூசி கருவிகள் சில இலங்கைக்கு இலவசமாகக் கிடைக்கலாம். ஆனால், ஏனையவற்றை அரசாங்கம் பணம் செலுத்தியே பெறவேண்டியிருக்கும். அதற்கு பெரும் செலவாகும்.

கொரோனா வைரஸ் தொற்று நோயாளியொருவருக்கு ஆரம்பத்தில் மருந்துகள் கொடுக்கப்பட்ட அதன் நோய் எதிர்ப்பு சக்தி ஒன்றரை வருடங்களுக்கு நீடிக்கும். இதனால் ஒவ்வொரு வருடமும் மருந்தை வழங்க வேண்டியேற்படும்.

எனவே, கொரோனா தடுப்பு மருந்துக்கு மிகப்பெரும் தேவையுள்ளது. இது அனைத்து நாடுகளுக்கும் சமமாகக் கிடைப்பதை உறுதிப்படுத்த பொறிமுறை ஒன்றை உலக சுகாதார ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும் -என்றார். (அ-எ)

## கொரோனா....

இந்த மரணங்கள் தொடர்பான விவரங்களை அரச தகவல் திணைக்களம் நேற்று மாலை அறிவித்தது.

இதன்படி 51 வயதுடைய இராஜகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர் உயிரிழந்தார். அவர் முதியோர் இல்லத்தில் தங்கியிருந்தவராவார். கடந்த 7ஆம் திகதி அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட நியுமோனியா காய்ச்சல் காரணமாக அவர் உயிரிழந்தார்.

கொழும்பு - 10 ஐ சேர்ந்த ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளார். அவர் கடந்த 23ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்துள்ளார். கொரோனா தொற்றினால் சுவாச கட்டமைப்பில் ஏற்பட்ட பாதிப்பால் அவர் உயிரிழந்துள்ளார்.

கம்பஹா, உடுகம்பல பிரதேசத்தில் 63 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவர் கம்பஹா மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலையில் நேற்று சேர்க்கப்பட்ட நிலையில் மரணாமானார்.

இதேபான்று, 55 - 60 வயதுக்குட்பட்ட அடையாளம் காணப்படாத ஆண் ஒருவரும் உயிரிழந்தார். அவரது உடல் கடந்த 8ஆம் திகதி பிரேத பரிசோதனைக்காக கொண்டு வரப்பட்ட நிலையில் அவருக்குக் கொரோனா தொற்றியமை உறுதியாகியுள்ளது. ராகமயைச் சேர்ந்த 46 வயதுடைய ஆண் ஒருவர் கொவிட் -19 நோய் காரணமாக உயிரிழந்தார். இதன்படி இலங்கையில் இதுவரை 41 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்தனர்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.11.2020 புதன்கிழமை
சார்வாரி, ஐப்பசி 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கமலா ஹரிஸை ‘விரும்புதல்’

அமெரிக்க தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து தமிழ்த் தலைவர்கள் என்போரின் பார்வை ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதியாக தெரிவாகியிருக்கும் கமலா ஹரிஸ் ஆகியோர் மீது திரும்பியிருக்கின்றது. இது வழமையான ஒன்றுதான். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் அமெரிக்காவின் புதிய தலைவர்கள் ஈழத் தமிழர் பிரச்னையில் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டுமென்று தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார். இதனைத் தொடர்ந்து இன்னும் பல அறிக்கைகள் வெளிவரக்கூடும்.

2009இல் யுத்தம் நிறைவுற்றதிலிருந்து இவ்வாறு மற்றவர்களை நோக்கி அறிக்கைகளை வெளியிடுவதையே தமிழ்த் தேசிய தரப்புக்கள் வேலையாக செய்து வருகின்றன. ஆனால், மற்றவர்கள் தங்களை நோக்கித் திரும்புவதற்கான எந்தவொரு வேலையையும் இதுவரையில் உருப்படியாக செய்ததில்லை. இப்போது, கமலா ஹரிஸ் தொடர்பில் புலம்புவது போன்றுதான் முன்னர் ஹிலரி கிளின்ரன் தொடர்பிலும் சிலர் புலம்பித் திரிந்தனர். புலம்பெயர் அமைப்புக்கள் சில, ஹிலாரியின் தேர்தல் நிதிக்கும் பங்களித்திருந்தன. இறுதியில் ஹிலரிக்கு நல்லூர் கோவிலில் தோங்காய் உடைக்கும் நிலைக்கு தமிழ் அரசியல் சென்றிருந்தது. இப்போதும் அவ்வாறான கற்பனைகளைக் காண முடிகின்றது.


இப்போது எங்கு பார்த்தாலும் கமலா ஹரிஸ் தொடர்பான அபிப்பிராயங்களைக் காண முடிகின்றது. இதுபோன்ற கருத்துக்கள் எப்போதுமே மக்களை ஒரு வகையான மாயைக்குள் வைத்திருக்கவே பயன்படும். கமலா ஹரிஸ் ஓர் அமெரிக்கர். அவரது பெயரில் தமிழ் வாடை உண்டு. அதற்காக அவரை தமிழராக எண்ணிக்கொண்டு கற்பனையில் மிதப்பது அறிவீனம். ஒருவேளை அவர் தமிழராக இருந்தால்கூட, அது ஒரு போதுமே தமிழர்களுக்கு பயன்படப்போவதில்லை. ஏனெனில், அவர் அமெரிக்காவின் கட்டமைப்பில் ஓர் அங்கம் மட்டுமே! டொனால்ட் ரம்பை எதிர்கொள்வதற்கு ஆசிய – ஆபிரிக்க கலப்புள்ள ஒரு துணை ஜனாதிபதி வேட்பாளர் தேவைப்பட்டார்.

இதன் காரணமாகவே பைடன் அவர் மீது திரும்பினார். உண்மையில் ஜனநாயக கட்சியின் தெரிவு கமலா அல்ல. செனட்டர் எலிசபெத் வாரனே பெரும்பாலானவர்களின் தெரிவாக இருந்தது. ஆனால், பைடன் விடாப்பிடியாக கமலாவையே தெரிவுசெய்திருந்தார். கமலாவின் துணை ஜனாதிபதிப் பின்னணியினால்தான் பல லட்சம் இந்திய வம்சாவளி அமெரிக்கர்களின் வாக்குகளை பைடனால் கவர முடிந்தது. ஒருவேளை கமலாவை தவிர்த்திருந்தால் பைடன் வெற்றியை தவறவிட்டும் இருக்கலாம். ஏனெனில், ட்ரம்ப் இலகுவில் தோற்கடிக்கக்கூடிய ஒரு வேட்பாளராக இருக்கவில்லை. எனவே கமலா ஹரிஸின் வரவு முற்றிலும் தேர்தல் வெற்றி தொடர்பானது. மற்றும்படி அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கைக்கும் இதற்கும் ஒருவித தொடர்புமில்லை. அமெரிக்காவின் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கான வெளிவிவகார விடயங்களை கையாளப் போவது, புதிதாக வரப்போகும் இராஜாங்கச் செயலர்தானே தவிர கமலா அல்ல.

தமிழர்கள் கோரிக்கைகளை முன்வைத்தாலும், முன்வைக்காது விட்டாலும் – அமெரிக்காவின் புதிய நிர்வாகம் நிச்சயம் மனித உரிமைகள் சார்ந்து தலையீடுகளை செய்யும். ஏனெனில், அமெரிக்காவின் மனித உரிமைகள் சார்ந்த கரிசனை என்பது தமிழர்கள் தொடர்பான ஒன்றல்ல, அது முழு ஆசியாவையும் இலக்காகக் கொண்ட ஒன்று. பைடன் நிர்வாகம் நிச்சயம் இந்த விடயத்தில் களமிறங்கும். இதனால், தமிழர்கள் விடயம் மீண்டும் சர்வதேச அரங்கில் பேசுபொருளாகும். ஆனால், அதனால் தமிழர்களுக்கு நன்மை வரவேண்டுமாயின் அதனைக் கையாளக் கூடிய ஆளுமையுள்ள தலைவர்கள் தமிழர்கள் மத்தியில் தேவை. ஆனால், அப்படியொரு தலைமைத்துவத்தை இதுவரையில் காண முடியவில்லை. எனவே, அமெரிக்காவை நம்புதல் என்பதை விட்டுவிட்டு, அமெரிக்கா தமிழர்களை திருப்பிப் பார்ப்பதற்கு என்ன வழியென்று தேடுவதுதான் இப்போது தேவையானது. ஆனால், அதற்காகக் கடினமாக உழைக்க வேண்டும். ஆனால், அதற்கான அர்ப்பணிப்பும் ஆளுமையுள்ள தலைவர்கள் தமிழர்கள் மத்தியில் இருக்கின்றார்களா?

# அமெ. உப ஜனாதிபதி கமலா ஹரிஸின் பார்வை இலங்கை தமிழர் விவகாரத்தில் எப்படி இருக்கும்?

- அலசுவது **இராஜதந்திரி** -


ரோஹினி லக்ஷ்மி

*இலங்கையின் மானிப்பாயை பூர்வீகமாகக் கொண்ட ரோஹினி லக்ஷ்மி ரவீந்திரன் கொஸொக்லு புதிய அமெரிக்க உப ஜனாதிபதி கமலா ஹரிஸின் பிரதம அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.*

*இந்தியாவின் தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட புதிய அமெரிக்க உப ஜனாதிபதி கமலா ஹரிஸ், இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தமிழ்ப் பெண் ரோஹினியை தமது அலுவலக பிரதான அதிகாரியாக தெரிவு செய்திருப்பதை இன மொழி அடிப்படையில் என்று கருதினால் அதுவோர் மடமையான எண்ணமாகவே இருக்க முடியும்.*

*ஏனெனில், கமலா ஹரிஸும், அவரது அலுவலகப் பிரதானியுமான ரோஹினி லக்ஷ்மியும் பிறப்பில் தமிழராக இருக்கலாம். ஆனால் அவர்கள் இருவருக்கும் தமிழை சரிவர பேசமுடியாது. இருவருமே மிகச்சிறிய பராயம் முதல் அமெரிக்காவிலேயே பிறந்து வளர்ந்து கல்வி பயின்றவர்கள்.*

*கமலா ஹரிஸை அவரது திறமையின் அடிப்படையில் இன, மத , பேதங்களுக்கு அப்பால் எவ்வாறு பைடன் தமது உப ஜனாதிபதியாக தெரிவு செய்தாரோ அதேபோலவே ரோஹினி லக்ஷ்மியையும் அவரது திறமையை கருத்தில் கொண்டே கமலா ஹரிஸ் தமது பிரதான அதிகாரியாக தெரிவு செய்திருந்தார்.*

*கமலா ஹரிஸுடன் அவரது அரசியல் வாழ்க்கையில் மிக நெருக்கமாகப் பயணித்தவரே ரோஹினி லக்ஷ்மியாவார்.*

*எனவே, ரோஹினியின் திறமையை கமலா நன்கறிந்திருந்தார். இதன்காரணமாகவே ரோஹினியை தமது பிரதான அதிகாரியாக கமலா நியமித்துள்ளார்.*

*ரோஹினியின் தந்தையார் ஒரு நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர். தாயார் ஓர் இல்லத்தரசியாவார். ரோஹினி அமெரிக்கர் ஒருவரை திருமணஞ் செய்த இரு பிள்ளைகளுக்குத் தயாராவார்.*

*இந்நிலையில், உப ஜனாதிபதி கமலா ஹரிஸுக்கு நெருக்கமான அதிகாரியாக இருப்பவர் இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தமிழ்ப் பெண் என்பதால் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் கமலாவின் பார்வை கரிசனைமிக்கதாக இருக்கும் எனக் கருதுவது தவறாகவே இருக்கும்.*

*அமெரிக்காவின் வெளிநாட்டுக்கொள்கையை பெரிதும் தழுவியதாகவே இலங்கை உள்விவகாரத்தில் மட்டுமல்ல, ஏனைய நாடுகளின் விவகாரங்களிலும் கமலா ஹரிஸ் மற்றும் அவரது ஜனாதிபதி ஜோ பைடன் ஆகியோரது பார்வை காணப்படும்.*

*இலங்கைத் தமிழர் விவகாரத்தை பொறுத்தவரை 1984 ஆம் ஆண்டு ஜனாதிபதி றொனால்ட் றீகன் ஆட்சிக் காலத்திலேயே இலங்கைத்தமிழர் விவகாரம் அமெரிக்காவில் முதலில் எதிரொலிக்கத் தொடங்கியது.*

*யாழ்ப்பாணத்தில் அமெரிக்கப் பொறியியலாளர் அலெனும் அவரது மனைவியாரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) கடத்தப்பட்ட விவகாரம் இலங்கை மீது அமெரிக்காவின் கவனத்தை திருப்பிவிட்டிருந்தது.*

*ஆயினும் இவ்விவகாரத்தை இந்தியா மூலமாக அமெரிக்கா ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்புக்கு அழுத்தம் கொடுத்து அலென் தம்பதியை விடுவித்தது.*

*அன்றைய அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றேகனும், அன்றைய இந்திய பிரதமர் இந்திரா காந்தியும் இது விடயத்தில் சரியான நகர்வுகளை மேற்கொண்டிருந்தனர்.*

*இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தன 1984ஆம்ஆண்டு அமெரிக்கா சென்றபோது அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றேகன் வழங்கிய விருந்துபசாரத்தில்அலென்தம்பதியினரும்அழைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இதன்பின்னர், இலங்கை தமிழர் விவகாரத்தில் அமெரிக்கா அரசியல் தீர்வொன்றை எப்போதும் வலியுறுத்தி வந்தபோதிலும் இலங்கை இராணுவத்துக்கு இராணுவ ரீதியான ஒத்துழைப்பையும் விரிவாக வழங்கி வந்திருந்தது.*

*இதன்பின்னர் நோர்வே அனுசரணையோடு 2002ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும் , தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே சமரச முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டபோது, அமெரிக்காவும் ஓர் இணை அனுசரணை நாடாக தனது பங்களிப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*அத்துடன், அமெரிக்க அனுசரணையோடு ஜெனிவாவில் இலங்கைத்தமிழர் விவகாரம் தொடர்பாக 2015ஆம் ஆண்டு பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டு, பின்னர் அப்பிரேரணையும் நலிவடைந்து எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதம் காலாவதியாகவுள்ளது.*

*இந்நிலையில், அமெரிக்காவில் எதிர்வரும் ஜனவரி மாதம் ஜோ பைடன் மற்றும் கமலா ஹரிஸ் ஆகியோர் முறையே ஜனாதிபதியாகவும் உப ஜனாதிபதியாகவும் பதவியேற்கவுள்ளனர். இந்நிலையில் கமலா ஹரிஸின் மத்தியஸ்தத்தை உரிய ராஜதந்திர அணுகு முறைகள் மூலம் தமிழ் தரப்பு அணுகும் பட்சத்தில் நல்ல முடிவுகளை எட்டக் கூட முடியும்.*

*ஆனால், இதுவிடயத்தில் தமிழ் அரசியல் தரப்பு தன்னை எவ்வளவு தூரம் தயாராக வைத்துள்ளதென்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# மண்டைதீவில் கடற்படையினருக்கு காணி சுவீகரித்தல் தடுத்துநிறுத்தம்

## அரசியல்வாதிகள், மக்கள் ஒன்றுகூடி எதிர்ப்பு

யாழ்ப்பாணம், நவ.11

**வேலனை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவுப் பகுதியில் மக்களின் காணிகளைக் கடற்படையினருக்கு சுவீகரிக்கும் முயற்சி அரசியல் வாதிகளினதும் பொது மக்களினதும் எதிர்ப்புகளையடுத்து தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.**

மண்டைதீவு ஜே/7 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அதாவது மண்டைதீவுச் சந்தியில் கடற்படை முகாம் அமைந்துள்ள மக்களுக்குச் சொந்தமான காணியை கடற்படையினருக்குச் சுவீகரிக்கும் நோக்கில் நில அளவைத் திணைக்களம் அளவீடு செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து காணி உரிமையாளர், அப்பகுதி மக்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முண்ணணி ஆகியவற்றின் அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் ஒன்று திரண்டு காணி அளவீடு செய்யும் இடத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனை அடுத்து காணி அளவீடு செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.



கடற்படையினருக்கு காணி சுவீகரிக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு வெளிப்படுத்தும் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முண்ணணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்களான கருணாகரன் நாவலன், சிறிபத்மராசா ஆகியோர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

(அ-3)



# காரைதீவு பிரதேசசபையின் பட்ஜெட் நிறைவேற்றப்பட்டது

காரைதீவு, நவ.11

காரைதீவு பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் ஏகமனதாக அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

33ஆவது சபை அமர்வின் போது புதிய ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட அறிக்கை காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது சபையின் தவிசாளர் உள்ளிட்ட 12 உறுப்பினர்களின் பங்களிப்பில் ஏகமானதாக வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் 02 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்கள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஒரு உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 4 உறுப்பினர்கள், சுயேச்சைக் குழுவின் ஒரு உறுப்பினர், காரைதீவு சுயேச்சைக் குழுவின் இரு உறுப்பினர்கள் என மொத்தமாக 12 உறுப்பினர்கள் சபையில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சுண்டிக்குளம் கடற்பரப்பில் பழுதடைந்த இந்தியப் படகு

யாழ்ப்பாணம், நவ .11

வடமராட்சி கிழக்கு, சுண்டிக்குளம் கரைக்கு அண்மித்த கடற்பரப்பில் இயந்திரக் கோளாறுக்கு உள்ளான நிலையில் இந்திய மீனவர் படகு ஒன்று காணப்படுவதாக தெரியவருகிறது.

இந்தப் படகை அண்மித்த இலங்கைக் கடற்படையினர் காரணம் கேட்டபோது, தமது படகு இயந்திரக் கோளாறால் பழுதடைந்துள்ளதாக படகில் இருந்த மீனவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இருந்தபோதிலும் தற்போதைய கொரோனா அச்சம் காரணமாக கடற்படையினர் படகை நெருங்கவில்லை என்று தெரியவருகிறது.

இதேவேளை, மற்றொரு படகு வருகை தருவதாகவும் தமது படகை இழுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இந்திய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நேற்றுக் காலையும் மற்றொரு இந்தியப் படகு இயந்திரக் கோளாறுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறையில் கரையொதுங்கியது.

இதில் இருந்த தமிழ்நாடு கோடியக்கரைப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் நால்வரும் கடற்படையினரிடம் தஞ்சமடைந்துள்ளனர்.

# வவுனியாவில் அதிகூடிய மழை வீழ்ச்சி

வவுனியா, நவ.11

வவுனியாவில் நேற்றுமுன் தினம் காலை முதல் நேற்றுக் காலை வரையான 24 மணி நேரத்துக்குள் 138.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியதாக வவுனியா வளிமண்டலவியல் அவதானிப்பு நிலையப் பொறுப்பதிகாரி சதானந்தன் தெரிவித்தார்.

இவ் வருடம் ஜனவரி தொடக்கம் நவம்பர் 10ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 886.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இருந்தும் இந்த வருடத்துக்குள் 24 மணி நேரத்துக்குள் பெய்த மழையே அதிகூடிய மழைவீழ்ச்சியாக பதிவாகியுள்ளது.

அதாவது நேற்றுமுன்தினம் காலை 8.30 மணிமுதல் நேற்றுக் காலை 8.30 மணியரையான கடந்த 24 மணி நேரத்துக்குள் வவுனியாவில் 138.5 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இது கடந்த வருட மழை வீழ்ச்சியை விடவும் அதிகளவான மழை வீழ்ச்சியாக் பதிவாகியுள்ளது.

# 6 இலட்சத்தை தாண்டிய பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு, நவ .11

இலங்கையில் இதுவரை 6 இலட்சத்துக்கும் அதிகமான பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை மாத்திரம் தொற்றுநோயியல் பணியகத்தால் 8 ஆயிரத்து 272 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பிரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 6 ஆயிரத்து 693 ஆகும்.

# 38 பேர் பூரண குணம்

கொழும்பு, நவ.11

தனிமைப்படுத்தல் நிலையங்களில் கட்டாய தனிமைப்படுத்தல் நடைமுறையை நிறைவு செய்த மேலும் 38 பேர் நேற்றுத் தங்கள் வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

அந்தவகையில் இதுவரை 64,075 பேர் தனிமைப்படுத்தல் நடைமுறைகளை நிறைவு செய்து தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர் என கொரோனா தொற்றைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

தற்போது நாடு முழுவதும் உள்ள 27 நிலையங்களில் 2,362 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய அணி வீரர்கள் இருவருக்கு தொற்று

கொழும்பு, நவ.11

இலங்கை தேசிய அணிகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் இருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் தேசிய வாள் சண்டை விளையாட்டு வீரர். மற்றையவர் தேசிய கூடைப் பந்தாட்ட அணி வீரர் என விளையாட்டு மருத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் டாக்டர் லால் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இரண்டு தேசிய விளையாட்டு வீரர்களும் தங்களது பணியிடங்களில் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து விளையாட்டு வீரர்களின் பயிற்சிகளை தொடர்ந்து முன்னெடுக்க இணையவழிச் செயல்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஏக்கநாயக்க கூறினார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக பல தேசிய விளையாட்டு வீரர்கள் இந்த ஆண்டு பல சர்வதேச நிகழ்வுகளில் பங்கேற்க முடியவில்லை. அதே நேரத்தில் பல சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளும் அமைப்பாளர்களால் இரத்து செய்யப்பட்டன.

இதேவேளை, அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக்கில் பங்கேற்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்த ஆண்டு இறுதியில் தேசிய தடகளக் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக லால் ஏக்கநாயக்க கூறினார்.

ஒலிம்பிக்கில் பங்கேற்கும் இலங்கை விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சியளிக்க சர்வதேசப் பயிற்சியாளர்களை வரவழைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் கொரோனா வைரஸ் காரணமாக இந்தத் திட்டம் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu
Online
சம்பவங்கள், செய்திகள் உடனுக்குடன் அறிந்துகொள்ள...
www.eelanadu.lk

# கொள்ளுப்பிட்டியில் சடலமாக மீட்கப்பட்டவருக்கு கொரோனா

கொழும்பு, நவ.11

கொள்ளுப்பிட்டியில் சடலமாக மீட்கப்பட்டவர் கொரோனா நோயாளி எனப் பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பாம்குரோவ் அவனியுவில் நபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ள பொலிஸார், அவரின் உடலை பி. சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தியவேளை அவர் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது எனவும் குறிப்பிட்டனர்.

# கொரோனா 4 ஆவது கட்டத்துக்கு சென்றால் நிலைமை மோசமாகும்

## சுகாதார அமைச்சின் பேச்சாளர் எச்சரிக்கை



கொழும்பு, நவ.11

**"இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கம் நான்காவது கட்டத்துக்குள் சென்றுவிட்டால் அதனைக் கட்டுப்படுத்தமுடியாத நிலை ஏற்படும். எனவே, அனைவரும் பொறுப்புடனும், பொதுநலன் கருதியும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வாழவேண்டும்." என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஜயருவன் பண்டார தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

கொரோனா வைரஸ் தாக்கத்தின் 3ஆவது மட்டத்திலேயே இலங்கை தற்போது இருக்கின்றது. அதாவது வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலையில் இருக்கின்றோம். ஆனால் 4ஆவது கட்டத்துக்குச் சென்றுவிட்டால் எல்லாம் கைமீறிச் சென்றுவிடும். உலக சுகாதார அமைப்பு 7 கட்டங்களைப் பட்டியலிட்டுள்ளது. இருந்தாலும் 4 ஆவது கட்டத்துக்கு வந்துவிட்டாலே பெரும் சவால்தான்.

எனவே, முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி (இரண்டு மீற்றர்) , கைகளைக் கழுவுதல் போன்ற சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும். 4ஆவது கட்டத்துக்குச் செல்லாமல் இருப்பதற்கு வேறு மந்திரங்கள் எதுவும் இல்லை. மேற்படி நடைமுறைகளையே பின்பற்றவேண்டும். அத்துடன், களியாட்டம் உட்பட சட்டத்தால் தற்போதைக்கு நிறுத்தப்பட்டுள்ள விடயங்களில் பங்கேற்பதையும் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் தற்போது கொரோனாவுடன் வாழத் தொடங்கிவிட்டன. இத்தாலி கிறிஸ்மஸ் பண்டிகைக்குகூட தயாராகின்றது. நாமும் சுகாதாரப் பழக்க வழக்கங்களுடன் முன்னோக்கிப் பயணிக்கவேண்டும்.

அதேவேளை, வீடுகளில் உயிரிழக்கும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. உரிய வகையில் மருந்துகளை எடுக்காமையும் இதற்குக் காரணமாக இருக்கலாம். எனவே, உரிய தரப்புகளுக்கு அறிவித்து மருத்துகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். வைத்தியசாலைக்கு வருவதற்கு அச்சம் கொள்ளவேண்டாம். சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் வாருங்கள். சிகிச்சையளிப்பதற்கு வைத்தியசாலை கட்டமைப்பு தயாராகவே இருக்கின்றது-என்றார்.

# ரிஷாத் பதியுதீனுக்கு தொடர்ந்தும் மறியல்

கொழும்பு, நவ.11

அரச நிதியை முறைகேடாகச் செலவிட்டமை மற்றும் தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர்19 ஆம்திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவரை நேற்று கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே எதிர்வரும்13 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு தினத்தில், புத்தளம் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்த மக்களை, அரச பஸ்கள் ஊடாக மன்னார் பகுதிக்கு அழைத்துச் சென்று வாக்களிக்க வைத்த சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# யாழ். கரையோரப் பகுதிகளில் கடல்நீர் உட்புகுந்ததால் பாதிப்பு

## 85 குடும்பங்கள் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், நவ.11

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்கரையை அண்டிய சில பகுதிகளில் வீடுகளுக்குள் கடல் நீர் உட்புகுந்ததால் 85 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுட்குப்பட்ட கொழும்புத்துறை ஜே/161 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள எழிலூர், மகேந்திரபுரம் கிராமங்களில் சுமார் 50 குடும்பங்கள் கடல்நீர் வீடுகளுக்கு புகுந்தமையால் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் 3 குடும்பங்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளன.

அத்துடன் ஜே/68 கிராம உத்தியோகத்தர் பிரிவில், தொடர்மாடிக்கு அருகாமையில் சுமார் 35 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதிகளுக்கு யாழ். மாட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் எஸ்.சூரியராஜா நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அத்தோடு யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன், யாழ்.மாநகர சபையின் பிரதி முதல்வர் து.ஈசன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களும் அந்தப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டனர். (அ-03)



# இரட்டைவாய்க்கால் பகுதியில் கரையொதுங்கியுள்ள மீன்கள்

முல்லைத்தீவு, நவ.11

முல்லைத்தீவு இரட்டைவாய்க்கால் பகுதியில் திடீரென பல இலட்சக்கணக்கான மீன் குஞ்சுகள் கரையொதுங்கியுள்ளன.

நேற்று நந்திக் கடலிலிருந்து இரட்டைவாய்க்கால் ஊடாக முல்லைத்தீவு பெரும் கடற்கரைக்குச் சங்கமிக்கும் வாய்க்காலிலேயே இவ்வாறு மீன் குஞ்சுகள் கரை ஒதுங்கின.

நேற்று முன் தினம் மாலை முதல் பெய்து வரும் தொடர் மழையின் காரணமாகவே நேற்று மீன்குஞ்சுகள் உயிருடன் கரையொதுங்கியுள்ளன.

இவ்வாறு கரையொதுங்கிய மீன் குஞ்சுகளை பொதுமக்கள் பார்வையிடுவதோடு வலை வீசிப் பிடித்து வருகின்றனர்.



# பிள்ளையான் மீதான வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, நவ.11

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு எதிர்வரும் 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்திரகாந்தன் மீதான வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றது.

மேல்நீதிமன்ற நீதிபதி டி.எஸ். சூசைதாசன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிர்வரும் 24ஆம் திகதிவரை வழக்கை நீதிபதி ஒத்திவைத்தார்.

இதேவேளை, மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்க வேண்டாம் என அரசதரப்பு சட்டத்தரணியினால் முன்வைக்கப்பட்ட வாதமும் நிராகரிக்கப்பட்டதுடன் சிறைச்சாலை ஆணையாளர் அனுமதி வழங்கினால் அவர் கூட்டத்தில் கலந்து கொள்ளமுடியும் எனவும் நீதிபதி இதன்போது தெரிவித்தார்.



# மாமனிதர் ரவிராஜின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிப்பு

தென்மராட்சி, நவ.11

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான மாமனிதர் நடராஜா ரவிராஜின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்றது.

அமரர் ரவிராஜின் உருவச் சிலை அமைந்துள்ள சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு முன்னால் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

அன்னாரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் அமரர் ரவிராஜின் மனைவியார் சசிகலா ரவிராஜ், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், சரவணபவன் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# சிறைக் காவலர்களுக்கு கொரோனா!

கொழும்பு, நவ.11

போகம்பரை பழைய சிறைச்சாலையில் பணி புரிந்த சிறைக் காவலர்கள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை முடிகள் தற்போது வெளியாகியுள்ள நிலையில், கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள இருவரும், சிகிச்சைக்காக தெல்தெனியாவிலுள்ள கொரோனா சிகிச்சை மையத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# எம்மை விமர்சிப்பதை உடன் நிறுத்தட்டும் ராகவன் எம்.பி.

## சிவாஜிலிங்கம் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், நவ.11

**சுரேன் ராகவன் தான் வந்த வேலையைப் பார்க்காமல் எம்மை விமர்சிப்பதை நிறுத்தவேண்டும் என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

முன்னாள் வடக்கு மாகாண ஆளுநரும் தற்போதைய அரசின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேன் ராகவன் தான் வந்த வேலையைப் பார்க்காமல் இனப்படுகொலை செய்த மொட்டுக் கட்சியில் இருந்து கொண்டு இப்போது எங்களுக்கு உபதேசம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்.

தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் எல்லோரும் தங்கள் நிலைப்பாட்டை மாற்றவேண்டும், தவறாகச் செயற்படுகிறார்கள் எனத் தெரிவித்திருக்கிறார்.

நான் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன். வடக்கு மாகாண ஆளுநராக இருந்தபோது, மக்களே உங்கள் குறைபாட்டைத் தாருங்கள். நான் அதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கிறேன் என்று சொன்னவர் நீங்கள். நான் உட்பட பலர் கொடுத்த குறைபாடுகளைக் குப்பைக்கூடையில் போட்டாரோ எனத் தெரியவில்லை. இப்போது அரசியல் கைதிகள் விவகாரத்தை பற்றி பரிசீலிப்பதற்கு 9 மாதங்கள் அவகாசம் கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

சுரேன் ராகவன் விரும்பினால் வடக்கில் தேர்தலில் போட்டியிடலாம். மக்கள் ஆதரவு இருந்தால் வெல்லலாம் அல்லது உங்கள் பூர்வீகமான இடத்தில், கொழும்பில் போட்டியிடலாம். அது அவருடைய விருப்பம்.

எனினும் வடக்கு-கிழக்கு மக்களுடைய பிரதிநிதிகள் பற்றி விமர்சிக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டாம். இல்லாவிட்டால் அவரைப் பற்றி நாங்கள் இன்னும் பல விடயங்களை சொல்லவேண்டிவரும். அவருடன் நேரடியான விவாதத்துக்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

ஆகவே அவருடைய விமர்சனக் கருத்துக்களை இத்துடன் நிறுத்தவேண்டும். இதை நாங்கள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம்-என்றார்.

# கொரோனா வைத்தியசாலை கிளிநொச்சியில் இன்று திறப்பு

கிளிநொச்சி, நவ 12

இலங்கையில் வேகமாக அதிகரித்துவரும் கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக மாவட்டங்கள் ரீதியில் அமைக்கப்பட்டுவரும் வைத்தியசாலைகளில் கிளிநொச்சி மாவட்டத்துக்கான வைத்தியசாலை இன்று புதன்கிழமை திறக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிருஷ்ணபுரம் கிராமத்தில் இந்த வைத்தியசாலை திறக்கப்படுகிறது.

200 படுக்கைகளுடன் கூடிய வைத்தியசாலையின் ஏற்பாட்டுப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளதாகவும் இன்று முற்பகல் 11 மணிக்குச் செயற்பாட்டுப் பணிகள் தொடங்கும் என்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்துக்கான வைத்தியசாலை மருதங்கேணியிலும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான வைத்தியசாலை மாங்குளத்திலும் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நவம்பர் 7ஆம் திகதிக்கு பின்னர்

# வேறு மாகாணங்களிலிருந்து யாழ் வந்தோர் பதிவு செய்க!

யாழ்ப்பாணம், நவ 11

தற்போது நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கொரோனா தொற்று வேகமாக பரவி வருகின்றது. எனவே கடந்த 7 ஆம் திகதியிலிருந்து வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் இருந்து வருகை தந்தவர்கள் அனைவரும் தத்தமது பிரதேசத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரியிடம் தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கடந்த 7ஆம் திகதிக்குப் பின்னர் வருகை தந்தோரை வீட்டில் சுயதனிமைப் படுத்துதலுக்கு உட்படுத்துவது தொடர்பான முடிவுகளை அவர்கள் இருந்து வந்த பிரதேசங்களின் நோய் நிலைமைகளின் அபாயங்களைப் பொறுத்து சுகாதார வைத்திய அதிகாரிகள் தீர்மானிப்பர்.

இவ்வாறு வேறு மாகாணங்களில் இருந்து தமது பிரதேசங்களுக்கு வருகை தந்தோர் பற்றிய தகவல்களை அவர்களோ அல்லது பொதுமக்களோ தமது பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர் அல்லது வடக்கு மாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் 24மணிநேர அவசர அழைப்பிலுள்ள 0212226666 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அறியத்தர வேண்டும்.

இதன் மூலம் தங்களையும் சமூகத்தையும் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்க வேண்டிய அவசர சேவைகளை எம்மால் வழங்க முடியும். இந்நோய் எமது மாகாணத்தில் பரவாதிருக்க எமக்கு தகவல்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்கவும்-என்று கூறியுள்ளார்.

# யாழ்.பல்கலை பணியாளர்களுக்கு தனியான பஸ் சேவைக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.11

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் யாழ்.பல்கலைக் கழகத்துக்கு வரும் பணியாளர்களுக்கென தனியான போக்குவரத்து சேவைகள் இன்று புதன் கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

பருத்தித்துறை, கொடிகாமம், தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் இருந்து யாழ். பல்கலைக்கழகத்துக்கு இந்த சேவை இடம்பெறவுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக நிர்வாகக் கிளையின் பிரதிப்பதிவாளர் ம.கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

நாட்டில் எழுந்துள்ள கொரோனா தொற்று அச்சத்தை அடுத்து, பணியாளர்கள் பொதுப்போக்குவரத்தைத் தவிர்க்கும் வகையில் இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி வளாகத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கென வவுனியாவில் இருந்தும், யாழ்ப்பாணத்தில் இருந்தும் இந்த மாத முற்பகுதியில் தனியான பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

யாழ்.மாவட்டத்தினுள் பருத்தித்துறை-யாழ்ப்பாணம் மார்க்கத்தில் அச்சுவேலி, இராச வீதி, கோப்பாய் வழியாக வரும் பஸ் புலோலிச் சந்தியில் இருந்தும், ஏ-9 மார்கத்தில் வரும் பஸ் கொடிகாமத்திலிருந்தும், காரை நகர் மார்க்கத்தில் வரும் பஸ் வட்டுக்கோட்டைச் சந்தியில் இருந்தும் தினமும் காலை 7 மணிக்குப் புறப்படுவதுடன், மாலையில் 4.15 மணிக்கு பல்கலைக்கழகத்தில் இருந்து திரும்புவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை கலாமோகன்



**தோற்றம்: 18.01.1967**
**மறைவு: 08.11.2020**

அல்லைப்பிட்டி, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5ஆம் ஒழுங்கை கருவேப்புலம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கலாமோகன் (Dipl. masch.Ing.FH) அவர்கள் 08.11.2020 சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(10.11.2020) புதன்கிழமை பனிக்கர் லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வே.கெ.தனபாலன் குடும்பத்தினர்.**
**இந்து இளைஞர் பேரவை.**

# பருத்தித்துறை நகரசபையின் பட்ஜெட் நேற்று நிறைவேறியது

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 6 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிப்பு



வடமராட்சி, நவ.11

பருத்தித்துறை நகரசபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஒரு வாக்கினால் நிறைவேறியது.

15 உறுப்பினர்களைக் கொண்ட இச்சபையில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் 6 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 6 உறுப்பினர்களுடன் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு உறுப்பினரும் சுயேச்சையான சமத்துவக் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினரும் ஆதரவாக வாக்களித்தனர். எஞ்சிய ஈ.பி.டி.பியைச் சேர்ந்த இரு உறுப்பினர்களும் சபைக்குச் சமூகமளிக்கவில்லை.

இதனால் ஆதரவாக 7 வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் கிடைத்த நிலையில் ஒரு வாக்கினால் வரவு-செலவுத் திட்டம் நிறைவேறியது.

நேற்றுக் காலை 9 மணியளவில் சபைத்தலைவர் யோ.இருதயராஜா தலைமையில் சபையின் விசேட கூட்டம் ஆரம்பமானதும் தலைவர் வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து பேசினார். முடிவில் அதனைச் சபையின் அங்கீகாரத்துக்கு விட்டார். அங்கீகாரத்துக்கு வாக்கெடுப்பு இரகசியமாகவா பகிரங்கமாகவா நடத்தப்படவேண்டும் எனச்சபையோரை வினாவினார். பகிரங்கமாக நடைபெறவேண்டும் என சபையோர் கேட்டுக்கொண்டனர். இதனைத் தொடர்ந்து பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்களிப்பதற்கு முன்னர் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் அதிருப்திக் கருத்துக்களை வெளியிட்டனர்.

வாக்கெடுப்பு முடிந்த பின்னர் அவர்களுக்கு பதிலளித்த சபைத் தலைவர்,

உங்களின் அதிருப்திகளில் சிலவற்றை ஏற்றுக் கொள்கிறேன் . சிலவற்றை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்களுக்கு அடுத்த கூட்டத்தில் பதில் அளிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# இந்தியப் படகுகளை அழிக்கும் அதிகாரம் இலங்கைக்கு இல்லை



கொழும்பு,நவ.11

**இலங்கைக் கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமாக நுழைந்த 121 இந்தியப் படகுகளை அழிக்க சட்டத்தின் பிரகாரம் அதிகாரம் இல்லை. அவற்றை கிருமி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுத்து அதன் பின்னர் உரிய தரப்பினருடன் பேசி தீர்வு காண வேண்டும் என்று சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா அறிவித்துள்ளார்.**

பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு அனுப்பிய தெளிவுபடுத்தல் கடிதத்திலேயே சட்டமா அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக இலங்கைக்கு வந்த படகுகள் தொடர்பான விசாரணைகள் இந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

1925 ஒகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்பு ஒழுங்குகளில் 70 ஆவது ஒழுங்கிற்கமைய படகினுள் காணப்படும் பாகங்களை நீக்க முடியும். எனினும் இந்தப் படகுகளைத் தீயிட்டு அழிக்க அதிகாரம் இல்லை.

எனவே இந்தப் படகுகள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையானது, கிருமி நீக்கத்திற்குட்படுத்துவதற்கான நடவடிக்கை மட்டுமே.

அதற்கமைய கிருமி நீக்கல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து உரிய தரப்பினரிடம் படகுகள் தொடர்பில் பேசி தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், மன்னார் மற்றும் ஊர்காவற்றுறை கடல் பகுதிக்கு, இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்து மீன்பிடித்ததாகக் கூறி, இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட படகுகளை அழிக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் 94 படகுகளும், மன்னார் மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பேரில் 27 படகுகளும் அழிக்கப்படவுள்ளன.

மொத்தம் 121 படகுகள் நீண்டகாலமாக, கடலிலேயே கிடப்பதால் பல பாதிப்புக்கள் ஏற்படுவதாகக் கூறி தொடரப்பட்ட வழக்கில், இலங்கை நீதிமன்றங்கள் படகுகளை அழிக்க உத்தரவிட்டுள்ளன என நீரியல் வளத்துறை தெரிவித்துள்ளது. (எ)

## முல்லைத்தீவு - வெலிஓயாவில் அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவு

முல்லைத்தீவு,நவ.11

முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயாவில் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணி முதல் நேற்று அதிகாலை 2 மணி வரை 287 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் நாடு முழுவதும் அதிக மழை பதிவாகியுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அறிவிப்புப்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் 250 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி, ஆபத்தான பகுதிகளில் வசிக்கும் நபர்கள் முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

உதவி மற்றும் தகவல்களைப் பெற 117 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அனர்த்த முகாமைத் துவ மத்திய நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்கள் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் 300 மில்லி மீற்றர் வரை மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் கணித்துள்ளது.

100 - 150 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி வடமேற்கு மாகாணத்திலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (எ)

## பதுளையில் பள்ளத்தாக்கில் பாய்ந்து ஓட்டோ விபத்து

### ஒரு வயது குழந்தை பலி!

பதுளை,நவ.11

பதுளைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒரு வயதுக் குழந்தை பலியானதுடன், மேலும் நால்வர் படுகாயமடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை - மஹியங்கனை வீதியிலேயே இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

வீதியில் பயணித்த ஓட்டோ வேகக்கட்டுப்பாட்டையிழந்து பள்ளத்தாக்கில் வீழ்ந்ததால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

இவ்விபத்தில் படுகாயமடைந்தவர்களில் ஆறு வயது சிறுவனும், ஓட்டோச் சாரதியும், அவரது மனைவியும் வேறு ஒர் பெண்ணும் உள்ளடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதுடன், விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## முடக்கல் பகுதிக்குள் ஊரடங்கு கால அனுமதியைப் பயன்படுத்த முடியாது

### பொலிஸ் தலைமையகம் அறிவுறுத்து

கொழும்பு,நவ.11

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு காலத்தில் வழங்கப்பட்ட அனுமதிகளைப் பயன்படுத்தி முடக்கல் நிலையிலுள்ள பகுதிகளுக்குள் பயணிக்கவோ? அல்லது அங்கிருந்து வெளியேறவோ? முடியாது என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

முடக்கல் நிலையிலுள்ள பகுதிகளுக்குள் பயணிக்க சிறப்பு அனுமதியைப் பெற சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டும்.

அதன்படி தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குச் செல்ல சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலுடனும், சில நிபந்தனைகள் அடிப்படையிலும் மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ள கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலிருந்து ஊழியர்களைக் கடமைக்கு அழைக்க சுகாதார அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் அசேல குணவர்த்தன வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு:

கொரோனா வைரஸ் தொற்று ஒழிப்பு நடவடிக்கைகளை இலகுபடுத்த நாட்டில் தெரிவு செய்யப்பட்ட பல பிரதேசங்களில் கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால் இந்தப் பிரதேசங்களில் அல்லது இந்தப் பிரதேசங்களிலிருந்து வெளியிடங்களுக்குப் பொதுமக்களின் பயணங்களுக்குக் கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதனால் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ள, அவசியம் தேவையான ஊழியர்களை மாத்திரம் இந்தப் பிரதேசங்களிலிருந்து அழைக்க முடியாமை பிரச்சினையாக அமைந்துள்ளது.

இந்நிலைமையைத் தவிர்க்க நாட்டின் ஏதேனும் பிரதேசங்களிலிருந்து அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்க பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் ஊழியர்களை அழைப்பது அத்தியாவசியமான சந்தர்ப்பங்க ளில் அது தொடர்பான தகவல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவித்து அந்தந்த சந்தர்ப்பங்களுக்கு அமைய அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



## மட்டக்களப்பில் கடும் மழை

## வெள்ளத்துக்குள் மூழ்கும் அபாயத்தில் தாழ்நிலங்கள்

மட்டக்களப்பு,நவ.11

கடந்த சில நாட்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் மழை பெய்து வருவதால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளும் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மழையால் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன் தாழ்நிலங்களிலுள்ள வீடுகளும் பாதிக்கப்படும் நிலையேற்பட்டுள்ளது.

கடும் வறட்சிக்குப் பின்னர் தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி வெளியிட்டிருக்கும் அதேவேளை தாழ்நிலங்களிலுள்ள விவசாய நிலங்கள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் மட்டக்களப்பில் தொடர்ந்து மழை பெய்து வருகின்றமை மக்களுக்கு மற்றுமொரு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. (எ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள
ஒரு தளம்
துயர் .நெற்
THUYAR.NET

ஈழநாடு



# என் வெற்றியை தடுக்கவே தடுப்பூசி அறிவிப்பு தாமதம்

## அமெரிக்க ஜனாதிபதி குற்றச்சாட்டு



வாஷிங்டன், நவ.11

‘கொரோனா தடுப்பூசி கண்டு பிடிப்பால் நான் வெற்றி பெறுவதை விரும்பவில்லை. இதனாலேயே அமெரிக்க உணவு, மருந்து கட்டுப்பாடு அமைப்பு வேண்டுமென்றே தடுப்பூசியை தாமதப்படுத்தியது”, என்று குற்றஞ்சாட்டியுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்.

கொரோனா தடுப்பூசி பைசல் 90 வீதம் செயல்திறன் மிக்கது என்று பைசர் நிறுவனம் நேற்றுமுன்தினம் அறிவித்தது. இந்நிலையிலேயே அமெரிக்க ஜனாதிபதி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அமெரிக்க உணவு, மருந்து கட்டுப்பாட்டு அமைப்பின் பதவிகளில் இருப்பவர்கள் ஜனாதிபதி ட்ரம்பாலேயே நியமிக்கப்பட்டனர். ஆனாலும், அவர்கள் தனது பிரசாரத்தைக் குழப்பும் விதமாக செயல்பட்டனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

# கொரோனா இன்னமும் சோர்வடையவில்லை

## எச்சரிக்கிறது உலக சுகாதார ஸ்தாபனம்

ஜெனிவா, நவ. 11

‘கொரோனா வைரஸுடன் போராடி நாம் சோர்வடைந்திருக்கலாம். ஆனால், அது நம்மிடம் சோர்வாக இல்லை”, என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ராஸ் அதானோம் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றாளருடன் தொடர்பு கொண்டமையால் தன்னை தனிமைப்படுத்திக் கொண்ட உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் தனது தனி



மைப்படுத்தலை முடித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடந்த அமைப்பின் வருடாந்த கூட்டத்தில் பங்கேற்றார்.

அங்கு உரையாற்றிய அவர், ‘நாம் கொரோனா வைரஸ் உடன் சோர்வடைந்து இருக்கலாம், ஆனால் அது நம்மிடம் சோர்வாக இல்லை. கொரோனா தம்மை விட பலவீனமானவர்களை வேட்டையாடுகிறது. ஆனால், இதுமற்ற பிரிவுகளையும்பாதிக்கிறது. வறுமை, பசி, காலநிலை மாற்றம் மற்றும் சமத்துவமின்மைக்கு தடுப்பூசி எதுவும் இல்லை - என்றார்.



# பீஹார் மாநில தேர்தல் ஆளும் கட்சி முன்னிலை

பாட்னா, நவ. 11

இந்தியாவின் பீஹார் மாநிலத் தேர்தலில் மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி அங்கம் வகிக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணி பெரும்பான்மை பெற்றுள்ளது.

பீஹார் மாநிலத்தில் 243 சட்ட சபை உறுப்பினர்களுக்கான தேர்தல் முடிவுகள் நேற்றுக் காலை முதல் அறிவிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சிகளின் கூட்டணி முன்னிலை வகித்தது. ஆனால், அடுத்த சுற்றுக்களில் மாநிலத்தை ஆளும் கூட்டணியான தேசிய ஜனநாயகக் கூட்டணி முன்னிலை பெற்றுள்ளது.

243 ஆசனங்கள் கொண்ட பீஹார் சட்டப் பேரவையில் ஆட்சி அமைப்பதற்கு 122 ஆசனங்கள் தேவை. ஆனால், இந்த செய்தி எழுதப்படும் போது 127 இடங்களில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. காங்கிரஸ் ராஷ்ட்ரிய கூட்டணி 87 இடங்களில் முன்னிலையில் உள்ளன.

இதேவேளை, ஐக்கிய ஜனதா தளம் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாரதிய ஜனதா கட்சி 73 இடங்களில் முன்னிலை வகிக்கின்றது. முதலமைச்சர் பதவி தலைமைக் கட்சிக்கு வழங்கப்பட்ட நிலையில், பெரும்பான்மை இடங்களில் பா.ஜ.க. முன்னிலை பெற்றுள்ளமையால் இது தொடர்பில் மாற்றம் ஏற்படலாம் என்று இந்திய ஊடகங்கள் தெரவித்துள்ளன.

# சீனாவின் தடுப்பூசியால் பக்கவிளைவு: சோதனையை நிறுத்தியது பிரேஸில்

ரியோடி ஜெனிரோ, நவ. 11

சீனாவின் கொரோனா தடுப்பு மருந்தால் பக்கவிளைவுகள் ஏற்பட்டதையடுத்து தற்காலிகமாக அதன் பரிசோதனையை இடைநிறுத்தியுள்ளதாக பிரேஸில் அறிவித்துள்ளது.

சீனாவின் தேசிய மருத்துவ நிறுவனமான ‘சினோபார்ம்” தயாரிக்கும் கொரோனா தடுப்பு மருந்து பிரேஸிலில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இந்நிலையில், ஒக்ரோபர் 29 ஆம் திகதி நடத்திய மருத்துவ பரிசோதனையால் பக்க விளைவுகள் ஏற்பட்டன. இதனால் மனிதர்கள் மீது நடத்தப்படும் மருத்துவ பரிசோதனை இடைநிறுத்தப்பட்டுள்ளது. பக்க விளைவுகள் குறித்து இப்போது விரிவாகக் கூற முடியாது என்று பிரேஸில் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தடுப்பு மருந்தாக 4 தடுப்பூசிகளை சீனா கண்டுபிடித்துள்ளது. இவற்றின் பரிசோதனை இறுதிக்கட்டத்தில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.




கொலம்பியா நாட்டின் மெடெல்லின் நகரில் மலர் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் பல்வேறு மலர்களால் வடிவமைக்கப்பட்ட ஓவியங்களை தங்கள் முதுகில் சுமந்தப்படி பங்கேற்றனர். இதில் பங்கேற்ற ஒருவரின் புலி, மனிதனின் தலைகளுடனான ஓவியத்தை பூக்களால் அலங்கரித்த படைப்பே இது...

# விவாகரத்து செய்து கணவரை காதலியுடன் சேர்த்த மனைவி!

போபால், நவ. 11

தனது கணவர் காதலியுடன் சேர்ந்து வாழ்வதற்காக அவரை விவகாரத்து செய்துள்ளார் பெண் ஒருவர்.

இந்த சம்பவம் இந்தியா வின் மத்திய பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் அறிய வருவதாவது:

போபால்பிரதேசத்தை சேர்ந்த இந்த தம்பதியருக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர்திருமணம் இடம்பெற்றது. ஆனால், தனது காதலை கைவிட கணவர் விரும்ப வில்லை. அவர்கள் சட்டப்படி சேர்ந்து வாழவும் முடியவில்லை. இந்நிலையில்தான் அவரின் மனைவி தனது கணவரை விவாகரத்து செய்துள்ளார்.

இந்த வழக்கில் வாதடிய வழக்கறிஞர் இது குறித்து கூறுகையில், ‘அந்த நபர் தனது மனைவியிடமிருந்து விவாகரத்து பெறாமலே தனது காதலியை திருமணம் செய்ய விரும்பினார், இது சட்டப்படி சாத்தியமில்லை. ஆனால், அவரின் மனைவி மிகவும் முதிர்ச்சி மிக்கவர். அவர் தனது கணவரை அவரின் காதலியுடன் சேர்த்து வைப்பதற்காக அவரை விவாகரத்து செய்து அவரது காதலியை திருமணம் செய்ய உதவினார்”, என்று கூறியுள்ளார்.

# முடிந்ததை மீள திறக்க முடியாது

## அணு ஆயுத ஒப்பந்த விவகாரம்: ஈரானின் நிலைப்பாடு அறிவிப்பு

தெஹ்ரான், நவ. 11

அமெரிக்காவுடனான அணு ஆயுத ஒப்பந்த விவகாரத்தை மீண்டும் செயல்படுத்த விரும்பவில்லை என்று ஈரான் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ஈரானுடன் மோதல் போக்கை கடைப்பிடித்தார். அத்துடன் அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்தும் வெளியேறினார். மேலும், அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளையும் விதித்தார். இதனால் இரு நாடுகளிடையேயும் மோதல் போக்கு நீடித்தது.


இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்றுள்ளார். 2021 ஜனவரி 21 ஆம் திகதி அவர் ஜனாதிபதியாக பொறுப்பேற்பார். இதன்பின்னர் ஈரான்தொடர்பான அணுகுமுறை மாறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஆனால், இதற்கு ஈரான் விளக்கமளித்துள்ளது. அதில், “கடந்த காலத்தில் முடிந்ததை மீண்டும் திறக்க இயலாது. அமெரிக்கா விதிகளை மீறி அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்து விலகியது. அதற்கு அமெரிக்காதான் முழுக் காரணம். மேலும், ஈரானுக்கு எதிராக சர்வதேச விதிகளை மீறியதற்காக அமெரிக்கா பொறுப்பேற்க வேண்டும்”, என்று தெரிவித்துள்ளது.

# நான்கு வருடங்களின் பின்னர் வெள்ளை மாளிகையில் நாய்கள்

வாஷிங்டன், நவ. 11

அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையில் கடந்த நான்கு ஆண்டுகளாக எந்த செல்லப் பிராணிகளும் வளர்க்கப்படவில்லை.



இந்நிலையில் புதிய ஜனாதிபதி ஜோ பைடன் அங்கு செல்லும்போது அவருடன் சேர்ந்து அவரின் இரு நாய்களும் செல்லவுள்ளன.

அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எந்த செல்லப் பிராணிகளையும் வளர்க்கவில்லை. இவருக்கு முன்பு ஜனாதிபதியாக இருந்த பராக் ஒபாமா இரு நாய்களை வளர்த்திருந்தார்.

இந்நிலையில், பைடன் தன்னுடன் இரு நாய்களை அழைத்துச் செல்லவுள்ளார். பைடன் இரு ஜேர்மன் ஷெப்பேர்ட் நாய்களை வளர்த்து வருகின்றார். மேஜர், சாம்ப் எனப் பெயரிடப்பட்ட இந்த நாய்களில், மேஜர் மீட்பு பணிகளுக்கு உதவிக்குப் பயன்படுத்தும் நாயாகும். இந்த நாய்க்கு அதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. இந்த வகையில், வெள்ளை மாளிகைக்குள் நுழையும் முதல் மோப்பம் பிடிக்கும் பயிற்சி பெற்ற நாய் மேஜராகும்.

இதில் சாம்ப் எனப் பெயரிடப்பட்ட நாய், ஜோ பைடனின் வீட்டில் சிறு குட்டியிலிருந்து வளர்க்கப்பட்டு வருகிறது. ஜோ பைடனின் சிறுவயது செல்லப் பெயர் சாம்ப். இதனையே அந்த நாய்க்கும் வைத்துள்ளார்.





## கோப்பாயில் சிகிச்சை முடித்து 18 பேர் வீடுகளுக்கு திரும்பினர்

யாழ்ப்பாணம், நவ 11

கோப்பாய் கொரோனா சிறப்புச்சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைகளை முடித்த தென்பகுதி மாவட்டங்களைச் சேர்ந்த 18 பேர் நேற்று அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்களுக்கு கொரோனா தடுப்பு ஆலோசனை மற்றும் நோய் நிர்ணய அட்டைகள் வழங்கப்பட்டதுடன் கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதியின் சம்மதத்துடன் ஒவ்வொரு வருக்கும் கல்லூரியில் இருந்த வேப்ப மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (அ-3)

## தொற்றிலிருந்து குணமடைந்து வீடு செல்லவிருந்த நபர் மரணம்!

கொழும்பு, நவ.11

கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து வீட்டுக்குச் செல்லத் தயாரான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனச் சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

அவர் கொரோனா தொற்றிலிருந்து மீண்டு வீட்டுக்குச் செல்லத் தயாரான நிலையில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார் எனச் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

களனி ஹெட்டிகொட பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என அம்பாந்தோட்டை கொரோனா வைத்தியசாலையின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## நேற்று 657 தொற்றாளர் குணமடைவு

கொழும்பு,நவ.11

நாட்டில் நேற்று மேலும் 657 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்தனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 9,537 ஆக உயர்வடைந்தது.

இதேவேளை, இலங்கையில் 14 ஆயிரத்து 285 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அதில் 4,712 பேர் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன்493பேர்கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பிலுள்ளனர்.

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளான 40 பேர் இதுவரை உயிரிழந்தனர். (எ)

# பண்டிகைக்கால அங்காடி வியாபாரம் யாழ்.மாநகரத்துக்குள் முற்றாக தடை

## மீறினால் சட்ட நடவடிக்கை என்கிறார் முதல்வர்

யாழ்ப்பாணம், நவ 11

**யாழ். மாநகருக்குள் பண்டிகைக்கால அங்காடி வியாபார நடவடிக்கைகளுக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனை மீறினால் உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாநகர முதல்வர் இ.ஆனல்ட் அறிவித்துள்ளார்.**



இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தீபாவளிப்பண்டிகையை முன்னிட்டு வருடாவருடம் வழமையாக யாழ்ப்பாணம் மாநகர சபையினால் அனுமதிக்கப்படும் 'பண்டிகைகால அங்காடி' வியாபாரத்துக்கு இம்முறை முற்றாக தடை விதிக்கப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 வைரஸ் பரவல் மற்றும் தாக்கங்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பது எமது கடமையாகும். அந்த வகையில் கொவிட்-19 தாக்கத்திலிருந்து யாழ்.மாநகரத்தையும், பொதுமக்களையும் பாதுகாக்கும் வகையில் எம்மால் முன்னெடுக்கப்பட்டுவரும் முன்னாயத்த நடவடிக்கைகளின் தொடராக சுகாதாரத்துறையினர் மற்றும் மருத்துவர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை கருத்திற்கொண்டு இம்முறை பண்டிகைகால அங்காடி வியாபாரம் முற்றாகத் தடை செய்யப்படுகின்றது.

எமது தடையை மீறி யாரேனும் நடைபாதைகளில், வீதியோரங்களில், யாழ் நகர்ப் பகுதிகளில் மற்றும் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து எமது மாநகர வருமானவரிப் பரிசோதகர்களால் அடையாளப் படுத்தப்படுமிடத்து அந்த விற்பனைப் பொருட்கள் மாநகரசபையினால் கைபப்படுத்தப்படுவதுடன் அவை மீள ஒப்படைக்கப்படமாட்டாது. மேலும் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட உரிய நபர்கள் மீதும் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே எமது மாநகர குடியிருப்பாளர்கள், பண்டிகைகால நடைபாதை வியாபாரிகள், வெளிமாவட்ட பண்டிகைகால அங்காடி வியாபாரிகள் என அனைவரும் இவ்விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும்-என்று கூறியுள்ளார்.

## வவுனியா பொருளாதார மையத்தை உடன் பயன்பாட்டுக்கு அனுமதிக்குக!

### நாமல் ராஜபக்ஷவிடம் கோரிக்கை

வவுனியா, நவ 11




வவுனியா மதகுவைத்தகுளம் பகுதியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கட்டி முடிக்கப்பட்டு திறந்து மக்கள் பயன்பாட்டுக்கு கையளிக்கப்படாமலிருக்கும் பொருளாதார மத்திய நிலையத்தை மக்கள் பயன்பாட்டுக்கு கையளிக்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் வவுனியா மாவட்ட செயலக புதிய கேட்போர் கூடத்தில் நகரிலுள்ள வர்த்தகர்கள் எதிர்நோக்கும் விடயங்கள் குறித்து கலந்துரையாடல் ஒன்று வவுனியா வர்த்தகர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்போது, அதில் கலந்து கொண்ட வர்த்தகப் பிரதிநிதிகளால், முன்வைக்கப்பட்ட கோரிக்கை களில் மதகுவைத்தகுளம் பகுதியில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் கட்டி முடிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் இன்று வரையிலும் அது திறந்து மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து அது குறித்து தொடர்புபட்ட துறையினருடன் கலந்துரையாடி மிக விரைவில் திறந்து வைப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வர்த்தகப் பிரதிநிதிகளுக்கு உறுதியளித்துள்ளார்.

## கொரோனா உயிரிழப்பை மறைத்து வருகிறது அரசு

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.11



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் ஏற்பட்ட உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை அரசு மறைக்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்ஹரின்பெர்ணான்டோ குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டில் அதிகரித்துள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டின் எதிர்க்கட்சி என்ற வகையில், இந்த தொற்றுநோய் சூழ்நிலையில், மக்கள் முகங்கொடுத்த பிரச்னைகள் தொடர்பாக தெரிவிப்பதற்கு, ஓர் அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

அந்தவகையில் நேற்று முன்தினம் இரவு மாத்திரம், ராஜகிரிய, கம்பஹா, குருநாகல் ஆகிய பகுதிகளில், 4 மரணங்கள் பதிவாகியிருந்தன. இவ்வாறு உயிரிழந்தவர்களின் மரணச் சான்றிதழ் ஐக்கிய மக்கள் சக்தியிடம் உண்டு.

அந்த இறப்புக்கு, கொரோனா வைரஸ்தான் காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, நாட்டை கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து காப்பதற்கான முயற்சியை, அரசு கைவிட்டுள்ளது என்பது உறுதியாகியுள்ளது.

மேலும், அரசின் கவனமின்மை நாட்டை பேரழிவுக்குள் இட்டுச் செல்லும்-என்றார்.

## மருத்துவ அதிகாரி அலுவலக ஊழியருக்கு கொரோனா

களுத்துறை,நவ.11

களுத்துறை மாவட்டம் மத்துகமை பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்கள் அதிகமானோர் இனங்காணப்பட்ட நிலையில் அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக ஊழியர் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டது.

சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது ,வருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதன்படி, ,ந்தத் தொற்றாளருடன் நெருங்கிப் பழகிய அந்த அலுவலக சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். (எ)

# தமிழ்த் தாய்க்கு பிறந்தவர்கள் அரசிலிருந்து வெளியேறுங்கள்

## சாணக்கியன் எம்.பி.தெரிவிப்பு



அம்பாறை,நவ.11

**சிங்களக் குடியேற்றங்களை அரசாங்கம் திட்டமிட்டு ஏற்படுத்துமானால் தமிழ்த் தாய்க்குப் பிறந்தவர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறுங்கள் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.**

அம்பாறை, காரைதீவு பிரதேச சபையின் 33ஆவது அமர்வில் புதிய ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று வெற்றி பெற்ற நிலையில், அதில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தமிழ் பேசும் மக்கள் இனிவரும் காலங்களில் பிரிந்து நிற்கக் கூடாது. இந்த அரசாங்கத்தில் தமிழ் பேசுபவர்கள் இருந்தால்உடன்வெளியேற வேண்டும்.

சிறுபான்மையினருக்கு எதிராக இந்த அரசாங்கம் செயல்பட ஆரம்பித்துள்ளது.

எனவே, எனது வேண்டுகோள் என்னவெனில் உண்மையான தமிழ்த் தாய்க்குப் பிறந்தவர்கள் இந்த அரசாங்கத்திலிருந்தால் உடன் வெளியேற வேண்டும் என்பதே என்றார். (எ)

# 1050 போதை மாத்திரைகளுடன் திருகோணமலையில் பெண் கைது

திருகோணமலை,நவ.11

திருகோணமலை - நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 1050 போதை மாத்திரைகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நேற்று முன்தினம் இரவு பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார்.

நிலாவெளி, ஆத்திமோட்டைப் பகுதியைச் சேர்ந்த 33 வயது பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

நிலாவெளி பிரதேசத்தில் கடையில் பொருள்களைத் திருடிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது திருடிய பொருள்களை வீடு ஒன்றினுள் மறைத்து வைத்திருப்பதாக சந்தேகநபர்கள் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து வீட்டைச் சோதனையிட்டபோது வீட்டுக்குள் இருந்து 1050 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் சந்தேகத்தின் பேரில் பெண்ணொருவரைக் கைது செய்ததாக பொலிஸார் கூறினர். (எ)

# மஸ்கெலியாவில் 12 வயது மாணவிக்கு தொற்று உறுதி

மஸ்கெலியா,நவ.11

மஸ்கெலியா காட்மோர் தோட்டத்தில் - பிரக்மோர் பிரிவில் மேலுமொரு கொரோனா வைரஸ் தொற்றாளர் நேற்று அடையாளம் காணப்பட்டார் என்று சுகாதார மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

12 வயது மாணவிக்கே இவ்வாறு வைரஸ் தொற்று உறுதிப் படுத்தப்பட்டது.

கடந்த 5 ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனைக்கு மாதிரிகள் பெறப்பட்டிருந்த நிலையில் நேற்றுக்காலை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்த மாணவியின் தந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்றிருப்பது கடந்த 5 ஆம் திகதி உறுதிப்படுத்தப் பட்டதையடுத்து அவர் அம்பாந்தோட்டையிலுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

கொழும்பில் தொழில் செய்து வந்த அவர் அண்மையில் வீட்டுக்கு வந்திருந்த வேளை வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை, மஸ்கெலியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் இதுவரை 16 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். (எ)

# மலசலக்கூட குழியில் விழுந்த 6 வயது சிறுமி பரிதாபமாக பலி

வவுனியா,நவ.11

வவுனியா ஓமந்தை பன்றிக்கெய்த குளம் பகுதியில் புதிதாக வெட்டப்பட்ட மலசலக்கூட குழியில் தவறி விழுந்த சிறுமி பரிதாபமாகப் பலியானார்.

பெற்றோர் வெளியில் சென்ற நிலையில் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி தவறுதலாக மலசலக்கூடக் குழியில் விழுந்துள்ளார்.

இதனை அவதானித்த உறவினர்கள் உடனடியாக சிறுமியை மீட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும் அந்தச் சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சத்தியசீலன் சஜீவினி (வயது-6) என்ற சிறுமியே இவ்வாறு மரணமடைந்தார்.

மலசல கூடத்துக்கு புதிதாக வெட்டப்பட்ட குழியில் மழை நீர் நிரம்பியிருந்த நிலையில் சிறுமி அதனுள் விழுந்தால் மரணமடைந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கிளிநொச்சியில் 310 பேர் இதுவரை தனிமைப்படுத்தல்

## அரச அதிபர் தகவல்



கிளிநொச்சி,நவ.11

ஜெயபுரம் பகுதியில் நபர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து கிளிநொச்சி மாவட்டத்தில் 310 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளனர் என அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய கொரோனா தொற்று நிலைமை தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜெயபுரம் பகுதியில் கொழும்பில் தொழில்புரிந்து வீடு திரும்பிய நிலையில் சுயதனிமைப்படுத்தலுக்குட்பட்ட நபருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து கிளிநொச்சி மாவட்டத்தில் 310 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவருடன் தொடர்புபட்ட குடும்பங்களும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அந்தக் குடும்பத்தினருக்கான பி.சி.ஆர். பரிசோதனை நிறைவடைந்து தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டாலும் தொடர்ந்து 14 நாள்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான உலருணவு பொதிகளை நான்கு பிரதேச செயலகமும் வழங்கி வருகின்றன. இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் 197 குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோன்று மாதாந்த சிகிச்சைக்காக மருத்துவமனை வரும் நோயாளர்களுக்கு குறிப்பாக முதியவர்களுக்கு வீடுகளுக்கு மருந்துகள் அனுப்பிவைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாவட்டத்தில் கொரோனா தொற்று நிலைமை சுகாதாரத் தரப்பினரின் அறிக்கையின் படி ஓரளவு கட்டுப்பாட்டில் இருந்தாலும் மக்கள் சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்-என்றார். (எ)

# சுகாதார நடைமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 125 பேர் கைது

கொழும்பு,நவ.11


சமூக இடைவெளி பேணல் மற்றும் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டின் பேரில் நேற்று மாலை 4 மணிக்கு நிறைவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் 125 பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை நாட்டு மக்கள் அனைவரும் வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெற உரிய சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டியது அவசியம்-என்றார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# பி.சி.ஆர்.அறிக்கை,தொற்று நீக்கல் சான்றிதழ் இருந்தால் நுழையலாம்

## மன்னார் மீளாய்வு கூட்டத்தில் தீர்மானம்



மன்னார்,நவ.11

நாடளாவிய ரீதியில் அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் தொற்றால் வெளி மாவட்டத்திலிருந்து மன்னார் மாவட்டத்துக்குள் வியாபார நோக்கத்துடன் உள்நுழையும் வியாபாரிகள் மற்றும் வியாபார வாகனங்கள் அனைத்தும் மன்னார் முருங்கன் பகுதியில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள பகுதியில் தொற்று நீக்கிய பின்னர் ஒரு மாதத்துக்குள் பெறப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையுடன்வரும் போது மாத்திரமே மாவட்டத்துக்குள் நுழைய அனுமதி வழங்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பான அவசர மீளாய்வுக் கூட்டம் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

மன்னார் பதில் அரச அதிபர் எஸ். குணபாலன், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த. வினோதன், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், முப்படைப் பிரதிநிதிகள் எனப்பலரது பங்கு பற்றுதலுடன் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் இந்தக்கூட்டம் இடம்பெற்றது.

இந்தக்கூட்டத்தில், கொரோனா வைரஸ் பரவலால் நிறுத்தப்பட்டுள்ள மாவட்டங்களுக்கிடையிலான பொதுப் போக்குவரத்து சேவை தொடர்பிலும் அவற்றை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பிலும் அத்தியாவசியப் பொருள்களுக்கான தேவைகள் தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

அத்துடன் திருமண நிகழ்வுகள், வைபவங்கள் போன்ற மக்கள் ஒன்றுகூடும் இடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பிலும், மதுபானசாலைகள் மற்றும் அதிஷ்டலாபச் சீட்டுக்கள் விற்பனை நிலையங்களில் அமுல்படுத்தப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பிலும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை இதுவரையான காலப் பகுதியில் மன்னார் மாவட்டத்தில் 2405 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதில் 12 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 10 பேர் குணமடைந்து வீடுகளுக்குச் சென்றுள்ளனர். (எ)

## தொற்று அபாயத்தால் தனிமையான பாஷையூர், திருநகர், கரவெட்டியில்

# இன்றுடன் நீங்குகிறது முடக்கம்!

யாழ்ப்பாணம், நவ. 11

**யாழ்ப்பாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ முடக்கப்பட்ட மூன்று பிரதேசங்கள் இன்று விடுவிக்கப்படுகின்றன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.**

யாழ். மாநகர எல்லைக்கு உட்பட்ட பாஷையூர் மேற்கு, திருநகர் மற்றும் வடமராட்சி இராஜ கிராமம் ஆகிய பிரதேசங்களே இவ்வாறு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுகின்றன.

அண்மையில், இந்தப் பிரதேசங்கள் கடந்த ஒக்ரோபர் 29ஆம் திகதி தொடக்கம் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் முடக்கப்பட்டன. இந்த முடக்க காலமான கடந்த 14 நாட்களில் புதிய தொற்றாளர்கள் எவரும் இப்பகுதியில் இனங்காணப்படவில்லை.

இதையடுத்து இந்த மூன்று கிராமங்களிலும் அறிவிக்கப்பட்டன தனிமைப்படுத்தல் முடக்கம் நீக்கப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-3)



## ஆனைப்பந்தி - இலுப்பையடி வீதியில் வடிகால் அமைக்கும் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி - இலுப்பையடி சந்திக்கும் இடையில் வடிகால் அமைப்பதற்கான ஆரம்ப செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான உத்தியோகபூர்வ கலந்துரையாடல் நேற்று மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையில் வடிகால் அமைக்கப்படவுள்ள பகுதியில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், ஒப்பந்ததாரர் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் துறைசார் அதிகாரிகளால் கருத்துக்களும், தெளிவுபடுத்தல்களும் முன்வைக்கப்பட்டன.

மேலும், இந்தக் கலந்துரையாடலில், மாநகர சபையின் குறித்த வட்டாரத்தின் உறுப்பினர் வ.பார்த்தீபன், யாழ் மாநகர பொறியியலாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், எல்.டி.எஸ்.பி. திட்ட அலுவலர்கள், மாநகர உத்தியோகத்தர்கள், அப்பகுதி பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (3)



## கொரோனா ஒழிய வேண்டி கிளிநொச்சியில் விசேட யாகம்

கிளிநொச்சி, நவ. 11

கொரோனா தொற்றிலிருந்து நாடும் உலகமும் விடுபட வேண்டி கிளிநொச்சி - செல்வாநகர் - கந்தன்குளம் ஓம் சக்திவேலன் ஆலயத்தில் நேற்று முன்தினம் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் நடத்தப்பட்டது.

கொரோனா தொற்றிலிருந்து விடுபட வேண்டி விசேட பிரார்த்தனைகளை நடத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கு அமையவும் லண்டனிலிருக்கும் ஓம் சக்தி வேலன் ஆயலத்தின் தர்மகர்த்தாவும் பிரதம பூசகரின் பணிப்புக்கு அமையவே இந்த யாகம் நடத்தப்பட்டது.

ஹோமத்தை சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்காந்தக்குருக்கள் நடத்த ஆலய பூசகர் சிவஸ்ரீ சு.கயிலாயநாதன், வேலன்சுவாமிகள், சைவப்புலவர் சத்தியதாசன், இலங்கை இந்துசமயத் தொண்டர் சபையின் தலைவர் வை. மோகனதாஸ் எனப் பலர் பங்கேற்றனர்.

## இந்திய மீனவர்கள் கரை ஒதுங்கினர்

வடமராட்சி, நவ. 11

சீரற்ற காலநிலை மற்றும் படகின் இயந்திரம் பழுதடைந்தமையால் 18 இந்திய மீனவர்கள் நேற்று வடமராட்சி கிழக்கில் கரையொதுங்கினர்.

செம்பியன்பற்று மாமுனை கடற்கரையில் 4 மீனவர்களும், சுண்டிக்குளம் கடற்கரையில் 14 மீனவர்களுமாக 18 பேர் இவ்வாறு கரையொதுங்கினர். இவர்களை தடுத்து வைத்திருந்த கடற்படையினர் விசாரணைக்காக பளை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்த மீனவர்கள் இரு படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். இந்நிரைலயில் ஒரு படகின் இயந்திரம் பழுதடைந்தது. அத்துடன் சீரற்ற காலநிலையும் நிலவியமையால் அருகில் தென்பட்ட கரைக்குத் திரும்பினர் என்று கூறப்பட்டது.

இந்நிலையில் கரையொதுங்கிய மீனவர்களை இந்தியாவுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ஐ-2-3)

## காங்கிரஸின் உறுப்பினர்கள் நீக்கம்: யாழ். நீதிமன்று இடைக்கால தடை

யாழ்ப்பாணம், நவ. 11

அகில இலங்கை தமிழ் காங்கிரஸில் இருந்து டென்ஷி, தர்சிபா ஆகிய யாழ். மாநகர சபையின் பெண் உறுப்பினர்களை பதவி விலக்கும் முடிவுக்கு நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

இவர்கள் உட்பட நால்வர், கட்சியிலிருந்து விலக்கப்பட்ட மணிவண்ணனின் ஆதரவாளர்கள் என்று குறிப்பிட்டு கட்சியிலிருந்து பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் நீக்கப்பட்டனர்.

கட்சி செயலரின் இந்த முடிவை எதிர்த்து யாழ். மாநகர சபை உறுப்பினர்களான டென்ஷி, தர்சிபா ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர்.

நடந்த வழக்கு விசாரணைகளை தொடர்ந்து இருவரையும் கட்சியை விட்டு நீக்கும் முடிவுக்கு 14 நாட்கள் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மீளவும் 24ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

## மைத்திரிபாலவின் முகவர் எங்களை விமர்சிப்பதா?

### சீ.வீ.கே. சிவஞானம் சீற்றம்

யாழ்ப்பாணம், நவ. 11

"முன்னாள் வடக்கு மாகாண ஆளுநராக இருந்த சுரேன் ராகவன், முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவின் முகவராக இருந்தவர். அவர் எங்களைப் பற்றி விமர்சிக்கக் கூடாது. எங்களுடைய தலைவர்களைப் பற்றி விமர்சிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்."

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் மாமனிதர் ரவிராஜின் நினைவேந்தலில் பங்கேற்ற அவரிடம், அரசியல் கைதிகளின் விடுதலை செய்ய வேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்த கருத்துக்கள் தொடர் பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சுரேன் ராகவன் இப்போது பல விடயங்களைப் பேசுகின்றார். குறிப்பாக அரசியல் கைதிகளின் விடுதலை பற்றிப் பேசுகின்றார். நீதி அமைச் சரை கேள்வி கேட்கின்றார். அவர் இதையெல்லாம் வடக்கு ஆளுநராக இருந்தபோது செய்திருக்கலாம். மைத்திரிபால சிறிசேனவின் முகவராக இருந்த அவர் இன்னொரு ஆட்சி வந்த பிறகு பேசுவது தமிழ் மக்களை ஒரு வகையில் ஏமாற்றும் வேலையா கவே நாங்கள் பார்க்கின்றோம்.

அவர் இந்த அரசாங்கத்தின் நியமன பாராளுமன்ற உறுப்பி னர். எங்களின் அரசியல் கைதி கள் விடுதலை பற்றி ஒரு பாராளு மன்ற உறுப்பினர் என்ற வகை யில் அவர் பேசலாம். ஆனால், எங்களின் வடக்கு, கிழக்கு சார்ந்த - தமிழ்த் தேசியம் சார்ந்த அரசியல்வாதிகளின் செயல்பாட்டை விமர்சிக்க அவருக்கு எந்த உரி மையும் கிடையாது. அவர் அவ் வாறு பேசுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவர் தமிழர் என்பதால் அவர் மீது மக்கள் வைத்துள்ள மதிப்பை அவர் குறைத்துக் கொள்ளக்கூடாது.

## மிருசுவிலில் சமூக சீரழிவு: மூவர் கைது

தென்மராட்சி, நவ. 11

தென்மராட்சியில் நீண்டகாலமாக செயல்பட்ட சமூக சீர்கேட்டு மையம் ஒன்றை கொடிகாமம் பொலிஸார் சுற்றி வளைத்தனர். அத்துடன், அங்கு தங்கியிருந்த இரு பெண்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறியவருவதாவது:

தென்மராட்சி - மிருசுவில் பகுதியில் ஒரு வீடொன்றில் நீண்டகாலமாக சமூகத்தை சீரழிக்கும் விதமான செயல்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று பிரதேசவாசிகளால் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

இந்நிலையில் கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் நேற்று மாலை அந்த வீடு முற்றுகையிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரும், விசேட புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து மேற்கொண்ட இந்த நடவடிக்கையில் அங்கு சமூகச் சீரழிவில் ஈடுபட்ட வெளிமாவட்டத்தை சேர்ந்த இரு பெண்களையும் ஓர் ஆணையும் கைது செய்தனர்.

## மோட்டார் திணைக்களம் இன்றுமுதல் வழமைக்கு

யாழ்ப்பாணம், நவ. 11

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்ப்பாணக் கிளை அலுவலகம் இன்று முதல் மீண்டு இயங்கவுள்ளது. கொரோனா தொற்று அச்சம் காரணமாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் கிளை அலுவலகம் மூடப்பட்டது.

தொற்று அபாயம் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களுடனேயே அலுவலகம் இயங்கும், பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி சேவைகளை பெறமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி tv
CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - தமிழ்
6.00 மணி : தரம் 07 - விஞ்ஞானம்
6.45 மணி : தரம் 08 - கணிதம்
7.30 மணி : தரம் 09 - விஞ்ஞானம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) புவியியல்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) பௌதீகவியல்

**பகல்**
12.00 மணி : தரம் 10 - கணிதம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்

**பகல்**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu

## ஐ.பி.எல். இருபதுக்கு -20

# மும்பை இந்தியன்ஸ் சம்பியன்






டுபாய், நவ. 11

டில்லி அணியை 5 விக்கெட்களால் வெற்றி கொண்டு ஐந்தாவது முறையாக ஐ.பி.எல். வெற்றிக் கிண்ணத்தை தன் வசமாக்கியது மும்பை இந்தியன்ஸ்.

ஐ.பி.எல். என்று அழைக்கப்படும் இந்தியன் பிறிமியர் லீக் கடந்த செப்ரெம்பர் 19 ஆம் திகதி ஐக்கிய அரபு எமிரேட்ஸில் தொடங்கியது. இதன் இறுதியாட்டம் நேற்றிரவு டுபாயில் நடந்தது.

இதில், ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும், ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான டில்லி கப்பிட்டல்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற டில்லியின் அணித் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

இதன்படி, முதலில் களமிறங்கியது டில்லி அணி. ஸ்றொய்னிஸ், தவான் இணை வழக்கம்போல் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர்.

மும்பையின் சார்பில் போல்ட் முதலாவது ஓவரை வீசினார். முதல் பந்திலேயே அவர் டில்லி அணிக்கு அதிர்ச்சி கொடுத்தார். அந்தப் பந்தை எதிர்கொண்ட ஸ்றொய்னிஸ் விக்கெட் காப்பாளர் டி கொக்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்தார் ரஹானே, முதல் விக்கெட் வீழ்த்தப்பட்டதால் இருவரும் விக்கெட்டைப் பாதுகாத்து ஆடுவதிலேயே குறியாயிருந்தனர். ஆனாலும், மூன்றாவது ஓவரில் மீண்டும் பந்துவீச வந்த போல்ட், 2 ஒட்டங்களைப் பெற்றிருந்தபோது ரஹானேயின் விக்கெட்டைக் கைப்பற்றினார்.

நான்காவது ஓவரை வீசிய யாதவ் தவானை 15 ஓட்டங்களில் ஆட்டமிழக்கச் செய்யவே 22 ஓட்டங்களுக்கு 3 முக்கிய விக்கெட்டுக்களை இழக்கப்பட்டன.

இறுதியாட்டத்துக்கு தகுதி பெறுவதற்கான இரண்டாவது ஆட்டம் தவிர 10 ஆட்டங்களில் தோல்வியடைந்தமைக்கு டில்லியின் ஆரம்பம் சரியாக அமையாததே காரணமகாக இருந்தது.

எனினும், நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த அணித்தலைவர் ஸ்ரேயாஸ் ஐயரும், ரிஷப் பந்தும் சரிவிலிருந்து அணியை மீட்டெடுத்தனர். மும்பையின் பந்து வீச்சாளர்கள் இந்த இணையை பிரிக்க முடியாமல் திணறினர்.

இந்த நிலையில் இருவரும் அரைச்சதம் கடந்து அசத்தினர். இந்நிலையில், ரிஷப் பந்த் 38 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஹெட்மையர் 5, பட்டேல் 9, ரபாடா ஓட்டம் எதையும் எடுக்காமலே ரன் அவுட் ஆக 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 156 ஓட்டங்களைப் பெற்றது டில்லி கப்பிட்டல்ஸ் அணி.

ஸ்ரேயாஸ் ஐயர் ஆட்டமிழக்காமல் 50 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 65 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார்.

மும்பையின் பந்து வீச்சில் போல்ட் 3, கோல்டர் நைல் 2 விக்கெட்களை வீழ்த்தினர். யாதவ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

157 என்ற இலகுவான இலக்கைத் துரத்தியது மும்பையின் இந்தியன்ஸ் அணி. ரோஹித் சர்மா, குயின்ரன் டி கொக் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர்.

ஆரம்பம் சிறப்பாக அமைந்தது. ஆனாலும் 12 பந்துகளை சந்தித்த குயின்ரன் டி கொக் 20 ஓட்டங்களைப் பெற்று ஸ்றொய்னிஸின் பந்தில் விக்கெட் காப்பாளர் பந்திடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

மறுமுனையில் அதிரடி காட்டிய ரோஹித் சர்மாவுடன் இணைந்தார் சூரியகுமார் யாதவ். நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியவர் 19 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

மறுமுனையில் அதிரடி காட்டிய ரோஹித் சர்மா 51 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்கள் 68 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த இஷான் கிஷன் அதிரடி காட்ட, மறுமுனையில் பொலார்ட் 9, ஹார்திக் பாண்ட்யா 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஆனாலும், 18.4 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு வெற்றி இலக்கான 157 ஓட்டங்களை எடுத்து வெற்றியை சுவைத்தது மும்பை இந்தியன்ஸ்.

இஷான் கிஷன் 19 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 33 ஓட்டங்களையும், குர்னல் பாண்ட்யா ஒரு ஓட்டத்தையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

டில்லியின் பந்துவீச்சில் நோர்ட்ஜே 2 விக்கெட்களையும், ஸ்றொய்னிஸ், ரபாடா ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக ரோஹித் சர்மா தெரிவானார்.

**மலிவு விற்பனை**

70% அல்கஹோல் கொண்ட *Sanitizer*
மலிவு விலையில்

| | | | |
|---|---|---|---|
| *50 ml* | *- 90.00* | *1l* | *- 700.00* |
| *100 ml* | *- 170.00* | *4l* | *- 2500.00* |
| *500 ml* | *- 380.00* | *5l* | *- 3000.00* |

தொடர்பு:
**35/58, Kalasalai Road, Thirunelvely,**
**Jaffna. 077 - 509 2737**

அருந்ததி
இணைய திருமண சேவை
0777 164 524 www.arunthathee.com

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| **15574 \| வே \| 1980**<br>யாழ் நகரம் \| இந்து<br>Sen. SW Engineer\|188செ.மீ<br>Australia \| பரணி (மேடம்) | **15820 \| ந \| 1987**<br>யாழ் நகரம்\| இந்து\|செவ் :8<br>Accounts Execute \| SL<br>விசாகம்(துலாம்) \| 158 செ.மீ |
| **15823 \| வே \| 1985**<br>சில்லாலை \| இந்து<br>Quantity Surveyor \| SL<br>சித்திரை (துலாம்)\| 174 செ.மீ | **15751 \| வே \| 1990**<br>சண்டிலிப்பாய் \| இந்து<br>Teacher \| SL \| 164 செ.மீ<br>சதயம் (கும்பம்)\| செவ் : 8 |
| **15712 \| வே \| 1988**<br>அத்தியடி \| இந்து<br>Accountant \| Australia<br>அச்சுவினி (மேடம்)\|169 செ.மீ | **15988 \| வே \| 1992**<br>இளவாலை\| இந்து<br>Doctor \| இலங்கை<br>மூலம் (தனுசு) \|160 செ.மீ |
| **15532 \| கோ\| 1990**<br>மூளாய் \| இந்து<br>Veterinary Surgeon \| SL<br>மூலம் (தனுசு) \| 180 செ.மீ | **16039 \| வே \| 1996**<br>கரவெட்டி \| இந்து \|170செ.மீ<br>Quantity Surveyor \| SL<br>பூராடம் (தனுசு) \| சூ-செ : 5 |
| **15844 \| வே \| 1991**<br>குப்பிளான்\| இந்து \| செவ்:1<br>Doctor \| SL \| 176 செ.மீ<br>அத்தம் (கன்னி) | **16102 \| கோ \| 1996**<br>உடுவில் \| இந்து ; SL<br>மிருகசீரிடம் (இடபம்)<br>செவ் : 4 \| 154 செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி,, கொக்குவில், யாழ்ப்பாணம்

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்



7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்



7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூார்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
எப்போது, என்ன உணவு உண்ணலாம்???



12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
**பகல்**
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்



5.00 மணி : அந்த நாலு பேர்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்
**இரவு**
7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN TELEVISION இசை

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டை டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி - தரம் 07 - கணிதம்
6.45 மணி - தரம் 08 - தமிழ்
7.30 மணி - தரம் 09 - கணிதம்
8.15 மணி - தரம் 10 - தமிழ்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி - க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
**பகல்**
12.00 மணி - தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி - தரம் 09 - கணிதம்
2.00 மணி - தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் வீஞ்ஞானம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் தமிழ்
**இரவு**
7.00 மணி - க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடலகள்
9.00 மணி - ஜெபமாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - புனித சூசையப்பர் மன்றாட்டு
**பகல்**
11.30 மணி - ஜெபமாலை
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
பகல்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
**இரவு**
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.11.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.